In my own teaching of Social Studies in the High School, I have often come up against a difficulty. The personalities about whom we speak in the class have to us an individuality. Napoleon and Nelson, Bismarck and the Kaiser, Louis XIV and Louis XVI, Richilieu, Garibaldi, Mazzini, Cavour—and we have many such in India's long history too—these are individuals for us quite distinct from one another. But to the pupil of fourteen or fifteen or even sixteen, they lack individuality. They are in his mind a jostling, confusing crowd of phantom figures. They may be colourful figures for us. In the pupils' mind, they are a depressing, monotonous gray.

This can be remedied only by our taking special pains to impress the individuality of the characters by mentioning their peculiarly individual traits. Personal anecdotes help powerfully to do this. Bring in the personal element in plenty and then the dream-figures acquire distinctness and take on definiteness. You cannot do this unless you are well read in biographies and autobiographies. If you have read Emil Ludwig's *Bismarck*, Abbot's *Napoleon*, Southey's *Nelson*, Lytton Strachey's *Victoria*, you can give a picture of the hero or heroine in the pupil's mind which will never fade. Unless this is done and the characters presented in flaming colours, your teaching will be tame, apologetic, halting, and leave the children cold.

Biographies and autobiographies therefore form a big part of the collateral reading that the teacher must do.

Again, I have succeeded in electrifying an otherwise dull class by reading out passages from a letter written by one of the old Chinese travellers to a contemporary in India. You will find this in Nehru's *Discovery of India*. So, too, passages from Kautilya's *Artha Sastra* and from the Asokan *stupas*. I

wonder how many of us have read, at least in translation, the great classical works to which we make reference in our classes. Wide reading in this is also very necessary.

There are plenty of historical dramas available. Dvijendralal Rai's dramas quite burn into readers' minds characters of Moghul and Rajput India. In recent times, there has been an enormous output of brochures and studies in particular fields and characters. All these constitute excellent material for collateral reding. When material like these is read, the teacher's own mind gets and retains a picture of characters, events and developments with a warmth of personality and intimacy of detail which is so very valuable. When you teach with this rich background, your teaching gets a certain confidence of tone, a warmth of intimacy with characters and a richness of memorable material which makes it indeed a vital emotional experience for the pupils.

I have only suggested a line or two. Pursuing these lines will open out to you an ever-widening vista of reading material in the form of biographies, historical speeches, one-act and longer plays, dissertations, brochures and results of the latest researches. Unless all this is absorbed by you, you have scarcely the mental equipment to teach Social Studies. Acquire this equipment and you will be amply rewarded in the rich culturing that your own mind gets and the eager appreciation of batch after batch of mentally invigorated and emotionally integrated pupils.

The sure foundations of the State are laid in knowledge, not in ignorance; and every sneer at education, at culture and at book-learning which is the recorded wisdom of the experience of mankind, is the demagogue's sneer at intelligent liberty, inviting national degeneracy and ruin.

—*G. W. Curtis.*

THE TEACHING PROFESSION

R. GANAPATHY IYER, B. Sc. (B. T. Student)

"The children of to-day are the citizens of tomorrow". The task of transforming the children of today into the good and capable citizens of tomorrow is in the teacher's hands.

Universal Education is the aim of all Governments in all countries. In the modern world education is an indispensable need in the life of a man. The quality of the Government in a country depends primarily on the intellectual calibre and educational attainments of the people. In India, for example, we have a democratic Government formed on the basis of adult franchise. The common man has got the power to institute the type of Government he wants and he will not be in a position to exercise his franchise wisely unless he has received at least sound elementary education.

Education is also essential for a man to enjoy the immense literary treasures of our heritage, not to speak of its utility in his every-day life. Life becomes nobler and richer in the spiritual plane by contact with other minds and their thoughts.

Every country always requires the services of educated men—engineers, doctors, lawyers, scientists, etc. It is the teacher who moulds all these men.

It is therefore clear that the teacher plays a very noble and vital role. He has not only to teach the three R's but he has also to turn children into brave, honest young men of good character, well trained for life.

In this service the teacher himself must lead an exemplary life. He derives pleasure from his work in moving with innocent and smiling children and he commands love and respect from the lowest to the highest.

He also derives pleasure in imparting the knowledge gained by him to thousands of children. Even the most illustrious men of the land are indebted to the teacher for their exalted position.

CAMP LIFE IN EDUCATIONAL INSTITUTIONS

C. J. RETNASAMI, B. A., B. T., Dip. Phy. Edn.

Camp life is now recognised as an experience of vital educational importance in our schools and colleges. This may also be considered as the most important agency to mould young peoples' character. Countries which are considered to be advanced in education do not fail to recognise this aspect and they provide all possible facilities for their school and college population to lead camp life not only during their school or college life but also after they leave them.

While drawing up a scheme of physical education on a national basis, the Board of Education in England thought it worth while to include in it activities like camping, walking tours, excursions, etc. Camp life provides opportunity for the individual to train himself to fit in as a healthy unit of the group or society in which he is to live and move. It also trains one to develop an active and independent outlook on life. Appreciation of finer things in life will come to a boy through living in the real camp environment. He will get the real satisfaction of wholesome companionship. He will develop a love of beauty as it is found in art, music, literature and, above all, in the broad bosom of Mother Nature. The influence of the group which makes itself felt in the camp spirit is an important force in determining one's social behaviour. A camp that is properly organised on a purely democratic and co-operative basis will certainly create an additional opportunity for developing the social attitudes and abilities needed for effective citizenship.

To realise the full benefits of camp life it is, therefore, very important for the organizers to pay careful attention to the following points of organization :

a) Camping cannot be conducted at any and every place. The site must provide facilities to achieve our objectives apart from providing the necessary amenities of life like water, air and food arrangements. It must be away from the noise

and bustle of cities. Appreciation of nature is possible only in a natural environment. So the primary thing is to select the proper place.

b) The right type of leadership is essential. The Leader is the main spring of the whole machinery. Again there should be grouping among the students under their own leaders. To lead and to follow are the two main factors in which the campers are to be trained. In true democracy it is most essential.

c) A well thought out programme for every day is very necessary. It must be printed and every camper must have a copy of it.

d) A list of necessary equipment must be prepared in advance and even the minutest detail must be attended to.

A camp planned with meticulous care to all these points will be of great educational value. Without such detailed planning, it loses all its educational significance.

You demand universal suffrage,-I demand universal education to go with it.

—W. E. Forster.

Education commences at the mother's knee, and every word spoken in the hearing of little children tends toward the formation of character. Let parents always bear this in mind.

—H. Ballou.

BE PUNCTUAL

S. SUNDARARAJAN, B. A. (B. T. Student)

One of the great truths of psychology is that thoughts tend to become actions. If a person persists in thinking he is ill, he will most certainly become ill, although really there may be nothing wrong with him. The extent to which the mind can rule the body is almost without limit.

Thought developed along right lines can cure you of such a bad habit as unpunctuality. If you are not able to work in time just sit down and think about it. You will quickly realize that you are unpunctual because you have not got a clear sense of duty.

Really speaking we as teachers have three important duties—to our own self-respect, to our employer and, above all, to our pupils. Once we have set our mind towards the goal of duty the battle is half won. Unpunctuality is largely due to a policy of drift. A sense of duty means having a purpose in view. In this case it means being fair to our employer, to ourselves, and to the students. Doing everything punctually and by setting an example to your pupils thereby, you are realizing your sense of duty to the largest extent. The teacher who is frequently unpunctual must not be surprised to find his pupils speedily following his example. Unless the teacher keeps strict watch over himself he cannot make his pupils punctual.

When you begin to organize your life you will cease to be a drifter. Lack of organization is the cause of unpunctuality. The man who will not be bothered to organize his life has an untidy mind. The net result is that he leads an untidy life and it will be reflected on his personality and on his pupils. The teacher is respected by no one and not even by himself if he forgets this important tenet of life.

VERBAL ILLUSTRATIONS IN TEACHING

A. NARAYANA REDDIAR, M. A., M. Ed.

The term 'illustration' covers many types of examples whose main function is to make some idea or mental picture clear, definite and precise. In teaching, illustrations make an appeal to the senses and the imagination of the learners, make the idea clear and enable the children to grasp correct knowledge. They are used because they serve as aids in teaching. They *stimulate interest and excite curiosity.*

We can recognize two forms of aid to the clarification of thought — word symbolism and concrete materials. Stories, word pictures and descriptions that are likely to stimulate the imagination of pupils constitute verbal illustrations. Pictures, models, specimens, diagrams, maps, and such other things constitute the other variety (concrete materials). The advantage with regard to the second variety is that they make unknown ideas known by their concrete appeal. Stories, word pictures and descriptions which constitute verbal illustrations also can stimulate the imagination and provide the mental imagery so necessary for making abstract ideas clear. Until some years ago teachers depended mostly on verbal illustrations but now-a-days concrete aids are more emphasized. Concrete aids are certainly more effective but not all schools can afford them. Verbal illustrations thus necessarily assume importance.

All normal people probably have some power of imagery though many may have a greater capacity for recalling sights than sounds or sounds than touch. The public orator, story teller and the teacher should make the greatest possible use of any power of imagery with which they are endowed. So, too, we know that many people find it very difficult to carry on ideational activity apart from the "crutch of vivid mental imagery". Thinking is closely associated with mental imagery. Effective public speakers have recognized the importance of selecting relevant mental imagery to clarify their ideas.

Young people depend upon visual aids and imagery as the framework of ideas. As educators we have to recognize the fact that youth by habit and limitation of ability utilize imagery as the framework of thought and the accumulation of ideas. Therefore it is desirable that there should be training in abstract thinking by providing the child and youth with a wealth of imagery. In each case the underlying motive is to ensure that learners get a definite mental picture of a certain experience generally in the form of visual images.

Now let us examine the problem of verbalism in teaching. Many educators, without realizing the full significance of rich imagery for adolescent learning, depend on word symbols to express their ideas. A close scrutiny of the text-books in use will show how abstract they are and how as a result pupils acquire a vocabulary of many words without much understanding. Difficulty arises out of the failure of both teachers and text-book writers "to recognize that language is but the symbol of ideas and words are but the accepted combination of artificial figures called letters, to which arbitrary meaning has been assigned."

The importance of non-visual illustrations cannot be overempasized in teaching. Every teacher should bear in mind the correct purpose and use of word symbolism. The specific purposes served by non-visual illustrations are many. They may be used to attract the attention of children in the class. Teachers know the value of anecdotes, stories, etc., to bring to attention a class growing restless. Teachers who have a stock of good illustrations at hand can easily maintain full class attention. Another reason for the use of illustrations is to aid understanding. A homely story may provide a mental imagery. Some people can think better if they attach their thinking to some incidents, stories or comparison of things experienced that contain important elements applicable to the problem on hand. Many require such mental imagery to comprehend abstract ideas and carry on creative thinking.

Children may undestand a fact or a principle. It is likely to be forgotten if it is not impressed. An appropriate incident or story may make its significance so clear that it will never be forgotten. Public speakers know well the power of incidents, word pictures, and stories to fire the imagination, stir up the emotion and incite people to action. The teacher also can make use of this effective instrument for the development of attitudes and ideas. Through the use of the vivid imagery of word symbolism the imagination of children can be stimulated.

Let us consider how these non-visual illustrations can be used effectively to the advantage of children. The success of a teacher lies in his ability to apply illustrations from students' experience or the practices of the community. The word picture is ineffective if there is no past experience with which to interpret it. Part of the skill of a teacher lies in helping the child to see the truth that the illustration can give him. The problem of comprehension is not likely to arise in the case of brighter children. The value and significance of an illustration lie in its effectiveness for the understanding of slower and weaker members of the class. " If, to give some idea of the depth of the ocean, one were to suggest that all the houses in a particular village or town, placed one on top of another, would not reach to the bottom of the ocean ", the chances are that students' attention will be upon the contemplated picture of house piled upon house and they will miss the appreciation of depth. So unusual language should be avoided since it is likely to attract attention to itself losing the essential idea.

The teacher may have to make use of a sufficient number of illustrations to ensure grasp of essential ideas. Some teachers attempt to teach in an atmosphere of too much abstraction. Simply by covering the syllabus, we cannot claim to have achieved progress in learning. We have to give patient and careful guidance to the pupils with many illustrations, wherever necessary, and help them in the development of their thought. Interesting illustrations and

examples should be used but the good teacher will see that by using many illustrations, by carefully connecting all of them with the point they are to explain and especially by making the children supply similar examples, illustrations of the point in hand are subordinated to the point itself. Further, the teacher should evoke vivid and realistic imagery with care. "Every teacher can recall word pictures that have left behind vivid mental imagery; some pleasant to recall, others unpleasant; some that have produced lasting values in attitudes established, while others would be better forgotten, if it were possible. The competent, socially minded teacher can make telling use of vivid imagery". So, too, many a point or general statement which has seemed hopelessly dull or difficult has developed meaning when interestingly illustrated. Interest is essential in helping memory. In after years one frequently recalls facts or general statements through the illustrations which accompanied them. We must make a careful scrutiny of word pictures to be used at important stages in the lesson in order to reduce the chances for the arousal of inappropriate mental imagery. The teacher has unlimited opportunities for using a variety of illustrations through stories, descriptions, incidents, anecdotes and so on. Individual differences in children's mental reactions can be served by a wide range of illustrations. Lastly, illustrations of the personal experience type should be sparingly used.

So verbal illustrations facilitate the learning process and are an effective means to elucidate what is presented to children. "These illustrations are a means to an end and not an end in themselves. These are good servants but bad masters." The teacher should give up the notion that a lesson cannot be successfully taught unless it is properly illustrated. It is not the use but the right use of the illustrations that determines the success of a lesson. "Wisely selected, timely presented and intelligently used, they are an unparallelled asset".

HOW PSYCHOLOGY CAN HELP YOU

V. RAJALAKSHMI, B. A. (B. T. Student)

Is it possible for a human being to be happy in this material world ?

Yes, it is quite possible. It depends upon the individual to make his life happy or unhappy. No doubt one is susceptible to worry and depression due to adversities. But, with all that, it is possible for one to live a happy and contented life.

The body has direct influence on the mind. The mind has a direct effect on the body, particularly the sub-conscious mind. A man's mind may be made either his willing slave or his merciless tyrant. When your mind is depressed, order it to be cheerful. It will readily obey. Say to your sub-conscious mind that you are happy and then you will be happy.

Have a hobby. Be interested in it. Give your latent powers a chance to develop. Have an aim in life and, what is more, believe in that aim and your ability to accomplish it. A man who is able to indentify himself with a rational ideal is well on the way to gaining will power.

Having fixed you ideal you may then try to sink it into the personality by means of auto-suggestion. Auto-suggestion is not something mysterious or magical. It is a technique based on the psychological fact that an idea firmly held by the mind tends to realise itself in action.

Get your purpose clearly fixed and, before you know it, you will be making the little details of your life fit into the scheme. Believe in yourself and in your own powers. Realize that you can, if you think you can. When you are depressed, say to your sub-conscious mind that you are going to accomplish something great in the world for which it is waiting. Tell yourself you can. Think success. It does not mean that you can do anything on earth merely by thinking that you can do it, but such a belief will add to your efficiency.

ஆசிரியர்

(வேதி)

அறியச் செய்வார் ஆசிரியர்
அறியா அனைத்தும் உலகத்தார்
அறியச் செய்வார் ....
மண்ணில் தொடங்கி வானத் தீறாய்
மண்டும் எண்ணக் குவிய லனைத்தும்
எண்ணத் தொலையா எழுத்தி லடக்கி
என்றும் தருவார் அறிவகம் வாரீர் !
அறியச் செய்வார் ....
உலகத்(து) ஆய்வை ஒன்றா யிணைத்து
உண்மை யறிவைச் சுட்டிக் காட்டி
உலகம் வியக்க உவக்கும்தமிழில்
ஒப்பத் தருவார் அறிவகம் வாரீர் !
அறியச் செய்வார் ....
மங்கா துழைக்கும் அறிவகந் தன்னில்
மாயும் உமது சிறுமை களனைத்தும்
பொங்கு முயர்வு ; தங்கும் அறிவு ;
சங்கத் தமிழாம், அறிவகம் வாரீர் !
அறியச் செய்வார் ....

அறிவும் அதன் வழிப்பட்ட ஒழுக்கமும் சேர்ந்து திருந்திய வாழ்க்கையே நாகரிகம். ஒழுக்கமின்றி அறிவுமட்டு மிருப்பின் அது நாகரிகமாகாது.

—ஞா. தேவநேசர்



Dr. A. L. Mudaliar addressing our students & Thiagarajar College students



Mr. K. N. Sundaram delivering the College Day Address

A Highway View—Sholavandan

CONNEMARA PUBLIC LIBRARY 5 - APR 1958 MADRAS



Mr. Rm. Krishnan
Our Tamil Orator

Mrs. E. S. Chellappa
Our English Orator

SCENES FROM COLLEGE DAY ENTERTAINMENTS

பழந்தமிழகத்தில் கல்விநிலை

மு. இளமாறன், பி. ஏ., (பி. டி., மாணவன்)

அரசியல், நாகரிகம், வாணிபம், இலக்கியம் இவற்றுளெல்லாம் மேம்பாடுற்றுப் பனிவரை யிமயமென நனிதிலங்கிய சங்கம் தழுவிய காலத்துப் பழந்தமிழர், கல்வித் துறையிலும் கலங்கரை விளக்கமென ஒளிபரப்பி எழில்நிரப்பி இருந்திருக்க வேண்டுமென்பது திண்ணம். எனினும், பொதுவான இலக்கிய நூல்களேயன்றிப் பிற துறை நூல்கள் நமக்குக் கிட்டாமையானும், ஆண்டு பல்கி நின்ற கல்வி நிலையங்களின் அமைப்பு, தகுதி, சிறப்புக் குறித்துக் காட்டும் தனியொரு பழந்தமிழ்நூல் இல்லாமையானும், இலக்கியங்களில் ஆங்காங்கே இலைமறை காயெனக் காணப்படும் அகச்சான்றுகளை ஆதரவாய்க் கொண்டே அவற்றை அறிய வேண்டியிருக்கிறது.

முதற்கண், புறநானூற்றைக் காண்போம். 'கல்வியைப் பற்றிப் புறநானூறு' என்றெண்ணிய போழ்திலேயே, ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனின் அழகிய பாடலே நம் நினைவிற்கு வருகிறது. பூமன்னனாகவும் நாமன்னனாகவும் விளங்கிய அம் மாமன்னன், அக் காலத்திற் கற்றோர் பெற்ற பெறற்கரும் பெற்றியினை எடுத்துக்காட்டும் இயல்பு, எண்ணி யெண்ணி இன்புறத்தக்கது.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயு(ம்)மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
'மூத்தோன் வருக' என்னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே."

[புறம். 183]

'பிறப்பன்று ஒருவர்க்குச் சிறப்பளிப்பது; கல்விச் சிறப்பே சிறப்பாகும்' என வேந்தனே விளம்பிடின், அவனாட்சிக்கீழ் அடங்கியமாநிலம் எத்தகு கல்விநலம் பெற்றிருக்கும்!

பொன்முடியார் என்னும் பெண்பாற் புலவர், தலைவியின் கூற்றாக,

"ஈன்று புறந்தருதல் என்றலைக கடனே;
சான்ரோ ணுக்குதல் தந்தைக்குக் கடனே;"

[புறம். 312]

என்றமையான், அக்காலத்தில், இயன்ற வரையில், தந்தையரே மைந்தர்கட்குக் கல்விபுகட்டி வந்தனரென்பது புலனுகும்.

அடுத்து, 'தகடூர் யாத்திரை' என்னும் பழந்தமிழ் நூலிற் காணப்படும் ஒரு பாடல்,

"வாதுவல் வயிறே! வாதுவல் வயிறே!
நோவேன் அத்தை நின்னீன் றனனே!
....
... ...
எம்மில் செய்யாப் பெரும்பழி செய்த
கல்லாக் காளையை ஈன்ற வயிறே."

என்று கல்லாமையால், மடமையும் மடியும் கொண்ட தனயனைப் பெற்ற தாயின் கூற்ருக அமைந்திருப்பதன் வாயிலாக, கல்லாமை எத்துணைக் கொடியதாக வெறுக்கப் பட்டதென்பது நன்கு தெரிய வரும்.

திருக்குறளிலும், 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ் விரண்டும் கண்ணென்ப வாழு முயிர்க்கு' (குறள் 392), 'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றையவை' (குறள் 400) என்று கல்விச் சிறப்பும், 'உளரென்னும் மாத்திரைய ரல்லாற் பயவாக் களரனையர் கல்லா தவர்' (குறள் 406), '........முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்' (குறள் 393), 'விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல் கற்ருரோ டேனையவர்' (குறள் 410) என்று கல்லாமை யினிழிவும் உணர்த்தப்பட்டுள்ளது.

குறளின் பான்மையினை யொட்டியே நாலடியாரும் கல்விச் சிறப்பினைப் பரக்கக் காட்டிப் போந்தது. செல்வத்தை மனதி லெண்ணி, அதனோடு கல்வியை ஒப்பிட்டு உணர்த்தும்,

"வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயிற் கேடில்லை;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்;
எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற."

[நாலடியார். 134]

என்னும் பாடல் மிகவாக எடுத்துக் காட்டப் பெறும் தன்மைத் தாகும்.

கடியலூர் உருத்திரங் கண்ணனூர், காவிரிப்பூம்பட்டினத்துக் கடைத்தெருச் சிறப்புக் கூறப் போந்தவர், அந் நகரின்கண் உள்ள பற்பல ஏதுக்கள் குறித்தும், ஏற்றுவிக்கப்பட்ட கொடிவகைகளைக் கூறுமிடத்தும்,

"பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித் தெடுத்த வுருகெழு கொடியும்,"

[பட்டினப்பாலை. 169-171]

என்றமையின், இக் காலத்தே, மாநாடுகள், ஆய்வுக் குழுக் கூட்டங்கள், பொது விவாத அரங்குகள், இவற்றில் வாதிட்டு முடிவு காண்டலைப் போன்றே, அக்காலத்தும் கல்வி வல்லோர் கூடி வாதிட்டு முடிவு கண்டன ரென்னலாம். மாங்குடி மருதனாரின்,

"அவையிருந்த பெரும்பொதியில்
கவையடிக் கடுநோக்கத்துப்
பேய்மகளிர் பெயர்பாட"

[மதுரைக் காஞ்சி 161-163]

என்ற வரிகளுக்குப் பொருள் கூறும் நச்சினார்க்கினியர், 'அவை' என்பதற்குச் சான்றோர் அவை எனக் கொண்டமையும், சங்கப் பாடல்களில் பல விடங்களில் இத்தகு சான்றோர் அவை, பொதியில், மன்றம் ஆகியவை பெரிதும் விதந்து காணப்படுதலும் ஈண்டு நோக்கத் தக்கது.

மேற்கண்ட குறிப்பை வலிமை செய்யு மாறாக, இளங்கோ வடிகளும்,

"மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்" என்கிறார்.

[5. இந்திர விழவூரெடுத்த காதை. 101-192]

இந்திர விழாவை யொட்டிப் பலிதரப்பட்ட பலதரப்பட்டவற்றையும் காண்பவர்கள், மேலும் காணுகின்ற மன்றங்களில் ஒன்றாகக் குறிப்பிடுகிறார், கல்வி வல்லுநர் கூடி வாதிடும் 'வித்தியா மண்டப'மும்—"ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள், பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்" [மணிமே. 1:60-61 விழாவறை காதை] என்று சாத்தனாரும், 'பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்' [கம்ப. நகர: 62] என்று கம்பரும் கூறிப்போதல் காண்க.

மேலும், இளங்கோவடிகள்,

“அறவோர் பள்ளியும் அறனோம் படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்
திறவோ ருரைக்குஞ் செயல்சிறந் தொருபால்”

[5. இந்திர 179-181]

என்று கற்பிக்கும் செயல் சிறந்து நின்ற இடங்களாகப் புத்த பள்ளிகளையும், அருகத் தானங்களையும் குறிப்பிட்டுள்ளமையினின்றும், பொதுவாக, அக்காலத்தே மதத்தின் அடிப்படையிலேயே கல்வி கற்பித்தல் நிகழ்ந்து வந்தது என்பது பெறப்படும்.

அக்காலக் கல்வி, பெரும்பாலும் ‘கேள்வி’ யின்பாற் பட்டதேயாகும். ஆசிரியர் உரைக்க மாணவர் கேட்டலே கேள்வி எனப்படும். வள்ளுவர், ‘கல்வி,’ ‘கல்லாமை’ இவற்றை யடுத்துக் ‘கேள்வி’ யையும் அமைத்திருப்பதும்,

“ஒடுக்கங் கூறுார் உயர்ந்தோ ருண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே”

[சிலப். 1 18-19 மங்கல வாழ்த்துப் பாடல்]

என்றும்,

“தாய்கைக் கொடுத்தாளத் தையலாள் தூய
மறையோன்பின் மாணியாய் வான்பொருட் கேள்வித்
துறைபோ யவர்முடிந்த பின்னர் ...”

[சிலப், 9: 28-30. கனாத்திற முறைத்த காதை]

என்று வான்பொருளாம் கல்வியுடன் கேள்வியையும் இணைத்தும், சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருத்தலும் இக் கருத்தினை வலியுறுத்துவன.

பலதுறைக் கல்வி பயிற்றுவிப்பதிலும் தேர்ந்தவர்கள், ஆண்டுக்கு ஒருமுறையோ, இருமுறையே ஓரிடத்தில் கூடிக் கலந்து உரையாடிக் கருத்துப் பரிமாற்றம் செய்வது அற்றை நாளில் இயல்பே என்பது,

“மெய்வகை யுணர்ந்த விழுமியோர் குழீஇய
ஐவகை நின்ற அருகத் தானத்துச்
சந்தி யைந்துந் தம்முடன் கூடி
வந்து தலைமயங்கிய வான்பொரு மன்றத்து”

[சிலப். 10: 17-20 நாடுகாண் காதை]

என்ற சிலப்பதிகார வரிகளால் உணரப்படும். 'ஐந்து' எனக் குறிக்கப்பெற்றவர், அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள் ஆகிய 'பஞ்சபரமேட்டிகளாம்' இதில் அருகன் என்பது போற்றத் தக்கவனையும், சித்தன் என்பது செயத் தகுவனவற்றைச் செய்து முடிப்போனையும், சாது என்பது அடக்கியோனையும் குறிக்கும். ஆசிரியர் என்பது தமிழகத்து ஆசிரியரையும், உபாத் தியாயர் என்பது வடமொழி ஆசிரியரையும் குறிக்கும் போலும்!

மதுரையில் இத்தகு பல்கலை பயின்ற அறிஞர் குழாமொன்று எஞ்ஞான்றும் நிலைநின்று விளங்கியமைக்கான குறிப்பினை,

"மறவுரை நீத்த மாசறு கேள்வியர்
அறவுரை கேட்டாங் கறிவனை யேத்தத்
தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்(கு)"

[சிலப். 10: 56-59. நாடுகாண்காதை]

நாநலமும் நன்மனமும் கொண்ட கவுந்தி யடிகள் செல்ல விழைதலை இளங்கோவடிகள் எடுத்துரைத்தல், அறிவித்து நிற்கிறது.

அற்றை நாள் அரசர்கள், தத்தம் ஆசிரியரை அரசியல் அலுவல்களில் அவ்வப்போது கலந்து ஆலோசித்துக் கொள்வர் என்ற சேதி,

"அமைகநின் சினமென ஆசான் கூற"

[சிலப். 26: 24. கால்கோட்காதை]

என்றும்,

"ஆசான் பெருங்கணி அறக்களத்து அந்தணர்
காவிதி மந்திரக் கணக்கர் தம்மொடு"

[சிலப். 22: 8-9. அழற்படுகாதை]

அரசரைக் காண வந்தனரென்றும்,

"அறக்களத் தந்தணர் ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடுஞ் சென்று"

[சிலப். 28: 222-223. நடுகற்காதை]

சேரன் செங்குட்டுவன் மாபெரும் பத்தினி கண்ணகிக்குப் படிவம் நாட்டினனென்றும் குறிக்கும் சிலப்பதிகார வரிகளால் அறியப்பெறுகின்றது. 'ஆசான் என்பது புரோகிதரைக் குறிக்கும் என்பாரும் உளரெனினும் அது பொருந்தாதென்க. ஏனெனில், பெருங்கணி என்பதே புரோகிதரைக் குறிப்பதாகும். கால்கோட்

காதையில், மேற் கூறப்பட்டவாறு, 'அமைகநின் சினமென ஆசான் கூற'வும், அடுத்து, "ஆறிரு மதியினுங் காருக வடிப்பயின்று, ஐந்து கேள்வியும் அமைந்தோன் எழுந்து" [சிலப். 26: 25-26] பேசினமையும், இவ்வரிகட்கு, "மேடம் முதலிய 12 ராசிகளிலும் உள்ள கோட்களின் நிலையைக் கற்று, திதி, வாரம் நட்சத்திரம், யோகம், கரணம் என்ற ஐந்தங்கங்களையும், கோள்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் என்ற ஐந்தனையும் பற்றி நல்ல கேள்வி ஞானமுடையோன் எழுந்து' என்பதே பொருளாகு மாற்றையும், அவன் கூற்றில் 'முழுத்தம்' (முகூர்த்தம்) என்ற சொல் வருதலையும் காண, பின்னவனே புரோகிதன் என்பதும், ஆசான் புரோகிதனினின்றும் மாறுபட்டவனென்பதும் தெளிவாகும்.

மேலும்,

"ஆடற் கமைந்த ஆசான் தன்னொடும்"

[சிலப். 3: 25. அரங்கேற்று காதை]

"தலைக்கோ லாசான் பின்னுள ளாக"

[சிலப். 30: 20. வரந்தரு காதை]

"தண்டமி ழாசான் சாத்தனிஃ துரைக்கும்"

[சிலப். 25: 66. காட்சிக் காதை]

ஆகிய இடங்களில் முதலிரண்டும் நடன ஆசிரியரான நட்டுவனாரையும், பின்னது தமிழாசிரியரையும் குறிப்பதினின்றும், ஆசான் என்பது ஆசிரியரையே குறிக்கும் என்ற உண்மை பெறப்படும். மணிமேகலையிற் சாத்தனார்,

"ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை"

[2; 30-32 ஊரழலுரைத்த காதை]

என மாதவியைச் சுட்டுதலின், ஓவியத்திற்கெனத் தனியொரு நூலிருந்தமையும்,

"மார்பிடை முந்நூல் வளையா முன்னர்
நாவிடை நன்னூல் நன்கனம் நவிற்றி
.... ஒப்பவை யெல்லாம்
நாத்தொலை வின்றி நன்கனம் அறிந்தபின்"

[13: 23-26. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை]

என்றமையான், அந்தணர், தம் மைந்தர் கல்விகற்ற பின்னரே பூணூல் அணிவித்தமையும்,

"மற்றவர் பாடை மயக்கறு மரபிற்
கற்றனன் ஆதலிற் கடுந்தொழின் மாக்கள்"

]16; 60-61. ஆதிரை பிச்சையிட்ட காதை]

என்னலால், தமிழகத்திற் பலமொழிகள் கற்பிக்கப்பட்டு வந்தன வென்பதும்,

"பிறர்க்கறம் அருளும் பெரியோன் தனக்குத்
தலைச்சா வகனுய்ச் சார்பறுத் துய்தி"

[21: 178-179. கந்திற்பாவை வருவதுரைத்த காதை]

என்றமை குறித்து, ஒவ்வொரு ஆசிரியர்கரும் ஒன்றுக்கு மேற்பட்ட மாணுக்கர் இருப்பதுண்டென்றும், அம் மாணுக்கருள் ஒருவர் தலைச்சாவக (பிரதம சீட)னுக இருப்பதியல்பே என்றும்,

"நவையறு நன்பொரு ளுரைமி னேவெனச்
சமயக் கணக்கர் தந்திரஞ் சார்ந்து"

[28: 1-2. சமயக்கணக்கர் தந்திரம் கேட்ட காதை]

எனப்பகர்தல் கொண்டு, மதுரையைப் போலவே காஞ்சியிலும் பலதிறத்தறிஞர் குழாம் நின்று நிலவிய தென்றும் அறியலாம்.

இவற்றுடனமையாது, மேகலை பாடிய சாத்தனுர், வேத வாதியின் கூற்ருக,

"கற்பங் கைசந் தங்கா லெண்கண்
தெற்றெ னிருத்தஞ் செவிசிக் கைமூக்
குற்ற வியாபகர ணமுகம் பெற்று"

]28: 100-103]

என்று இறைவன், கற்பமென்னும் அங்கம் கையாகவும், சந்தமென்பது காலாகவும், கணிதமே கண்ணுகவும், தெற்றென விளக்கஞ் செய்யும் நிருத்தமானது காதாகவும், சிட்சை மூக்காகவும், இவற்ருெடு பொருந்தும் சொல்லிலக்கணம் முகமாகவும் கொண்டு இலங்குவதாகக் கூறுதலினின்றும், இப்பிரிவுகள் அக்காலத்துக் கற்பிக்கப்பட்ட கல்வியின் கூறுகளெனக் கொள்ளலாம்.

பெண்டிரும் தக்கவாறு கல்விச்செல்வம் பெற்றிருந்தன ரென்பது, ஔவையார், பெருங்கோப்பெண்டு, பாரிமகளிர், பேய் மகள் இளவெயினி, காவற்பெண்டு, வெள்ளிவீதியார், வெண்ணிக் குயத்தியார், மாசாத்தியார், பொன்முடியார், நக்கண்ணையார், நசசெள்ளையார் முதலான பல பெண்பாற் புலவர்கள் சங்க காலத் திருந்தமையாலும், காக்கைபாடினியார் என்ற பெண்பாற் புலவர் யாப்பிலக்கணமே யியற்றினராதலினும் பெறப்படும்.

சங்க காலத்தில் கலைகள் பலவற்றையும் ஒரே ஆசிரியர் கற்பிப்பதுவே வழக்கமாயினும், மணிமேகலை இயற்றிய தண்டமிழ் ஆசான் சீத்தலைச் சாத்தனார், அகம். 102., நற்றிணை 273., இவற்றைப் பாடிய மதுரை இளம்பால் ஆசிரியன் சேந்தன் கூத்தனார், நற்றிணை 272-ம் பாடலைப் பாடிய முக்கல் ஆசான் நல்வெள்ளையார் ஆகியோரது பெயர்களில், அவர்களது ஊர்ப் பெயர், குடிப்பெயர், இயற்பெயர் இவற்றோடு ஆசான் அல்லது ஆசிரியர் என்னும் தொடர் வந்திருப்பதால், இப்போதைய ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்களைப் போல், இவர்கள் அற்றை நாள் ஆசிரியர்கட்கும் ஆசிரியர்களாய் இலங்கி வந்தவர்கள் போலும்!

"இங்ஙனம், அக்கால மக்கள் கல்வியிற் சிறப்புப் பெறப் பள்ளிகள் பல இருந்திருத்தல் வேண்டும். வாணிகத்திற்குக் கணக்கும் எழுத்தறிவும் இன்றியமையாதன. தமிழர் திரை கடலோடித் திரவியம் தேடியவர் ஆதலின், எண்ணிலும் எழுத்திலும் சிறந்திருந்தனர். அவர்களை அம்மேனிலைக்குக் கொணரத்தக்க பள்ளிகள் நாட்டில் பல்கி இருந்திருத்தல் இயல்பேயாகும், அக்கால ஆசிரியர் 'கணக்காயர்' எனப்பட்டனர். 'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்' எனவரும் தொடரை நோக்குக.

மருத்துவன் தாமோதரனார் என்பவர் மருத்துவக் கலையில் வல்லவர்; கணியன் பூங்குன்றனார் சோதிடக் கலையில் வல்லவர்; தமிழ்க் கூத்தனார் என்பவர் நடனப் புலவர்."

['தமிழர் செல்வம்':- ஆ. வ. இராமநாதன். பக். 19-20.]

இதுகாறும் கூறியவற்றால், சங்க காலத்தும் அதைத்தழுவிய பிற்காலத்தும், மருத்துவக்கலை, வானக்கலை, நடனக்கலை இவையும், இசைக்கலை, ஓவியக்கலை, கணிதம், அளவைநூல் (LOGIC) இவற்றோடு கற்பிக்கப்பட்டு, அற்றைநாள் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அருந்துணையாய் இலங்கிய தோடு, அவ்வத் துறைகளில் அவர்கள் பெற்றிருந்த வெற்றி இன்றும் நாம் உணரும் வண்ணம் நிலைநிற்கின்றது என்பதை நாம் அறிகின்றோம்.

அந்த நாள் வருமோ...?

சி. சுவாமிநாதன் பி. ஏ., (பி. டி. மாணவன்)

கனித்தமிழ்ப் பெயரைச் சொன்னல்
கடுப்புடன் எதிர்ப்பீர் என்றும்
தனிமையா (ய்) இயங்க வல்ல
தண்டமிழ் தீதோ? சொல்வீர்!
இனிமையோ (டு) இளமை கொண்டு
ஏற்றமோ (டு) என்றும் வாழும்
நனிசிறந் தவளே அன்ரு
நற்றமிழ் அன்னை தானே!

செந்தமிழ் மயமாய் நாடு
திகழ்ந்திட வேண்டும்; இன்னும்
சிந்தையும் செயலும் தூய
தீந்தமிழ் ஆக வேண்டும்!
முந்தையோர் தமிழை வாழ்வின்
மூச்செனக் கொண்டு வாழ்ந்தார்
அந்தநாள் வருமோ? அன்னை
அரும்புகழ் பரவும் நன்னுள்!

செந்தமிழ் என்னும் போது
சிந்தையே கிளர்ந்து துள்ளும்;
செந்தமிழ் செப்பின், நாவும்
சிறப்புடன் இனிக்கும் நாளும்;
செந்தமிழ் கற்ருல் மெய்யும்
திகழ்ந்திடும் வலிமை பெற்று;
செந்தமிழ்க் கல்வி மூலம்
செல்வமே பெருகும் என்றும்!

சட்டவை தமிழில்; செய்திச்
சாலைகள் தமிழில்; ஏற்கும்
பட்டமும் தமிழில்; பாடும்
பாட்டெல்லாம் தமிழில்; சிற்ப
நுட்பமும் தமிழில்; ஆக்கும்
நூலெல்லாம் தமிழில்; மண்ணில்
நாட்டிடும் பயிர்கள் யாவும்
நற்றமிழ் மயமாய்க் காண்போம்!

தமிழ்மகள் வயிற்றில் தோன்றித்
தனித்தமிழ் கற்றுத் தேர்ந்து
தமிழகந் தன்னில் நல்ல
தமிழ்ப்பணி செய்தே வாழும்
தமிழ்மக னுக்குப் பட்டம்
சமக்கிரு தத்தில் ஏனோ?
உமியையோ உண்பர் நல்ல
உறுசுவை உண்டி கொண்டோர்?

சத்துள தமிழைக் கற்றோர்
தமக்கெலாம் அளிக்கும் பட்டம்
'வித்துவான்' என்றே வேற்று
மொழிதனில் வழங்கல் அன்றி
அத்தகைப் பட்டந் தன்னை
ஆங்கிலந், தன்னில் தீட்டி
இத்தரை மீது நல்கும்
இழிநிலை என்றோ மாறும்?

நம்மவர்க்குள் ஆங்கிலம் படித்தவர் பலர் தொல்காப்பியம் அறிந்திலர். ஆனால் பிஷப் கால்டுவல், அந்நூலைப் பயின்று ஆராய்ந்து அதன் நுட்பங்கள் பலவற்றை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். மாணிக்க வாசகருடைய திருவாசகத்தின் உள்ளுரையை ஆங்கிலம் பயின்ற நம்மவர் அறிய விரும்பும்போது டாக்டர் போப்பினுடைய மொழிபெயர்ப்பைத் தேடிப் பார்க்கிறார். நம்மாழ்வார் திருவாய் மொழியின் கருத்தை அறிய வேண்டுமானால் சிலர் ஆங்கில மொழி பெயர்ப்பைத் தடவுகிறார். இன்னும் திருவள்ளுவர் திருக்குறளை நேராகத் தமிழில் ஆங்கிலம் பயின்ற தமிழர்களிற் பலர் படிக்கிறாரில்லை. நம் நாட்டுப் பெரியோர்கள் அருளிய உண்மைகளைத் தாய்மொழி வாயிலாக உணரும் ஆற்றலையும் வன்மையையும் இழந்து அவைகளை வேறு மொழி வாயிலாக அறிந்து கொள்ள முயலும் நிலையை நாம் அடைந்திருக்கிறோம். திருவாசகம், திருவாய்மொழி போன்ற அரும்பெரும் நூல்களின் கருத்துக்களை நாம் செவ்வனே உணர வேண்டுமானால் அவைகளைத் தாய்மொழியின் மூலம் உணர்வதே சிறப்பு.

—திரு. வி. க.

நூவல்வோனும் கொள்வோனும்

ஜி. சித்ரபுத்ரபிள்ளை பி. ஏ., பி. எஸ். ஸி. (பி. டி. மாணவன்)

கல்தோன்றி மண்தோன்ருக் காலத்து முன் தோன்றிய மூத்த குடியினர் தமிழ் மக்கள். அவர்கள் வழங்கி வரும் தமிழ் மொழியின் தோற்றமோ நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலத்திற்கு முன்னதாக வுள்ளது என்பது 'என்றுமுள தென்றமிழ் இயம்பி இசைகொண்டான்' என்ற கம்பர் வாக்கிலிருந்தும், 'ஆரியம் போல் உலக வழக்கழிந் தொழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம் வியந்து செயன் மறந்து வாழ்த்துவமே', என்று மனோன்மணீய முடையார் தமிழ்த் தாயை வாழ்த்துவதிலிருந்தும் தெள்ளிதின் விளங்கும். இவ்வாருக அம் மொழியும் அதில் நிறைந்து விளங்கும் கலைச்செல்வங்களும் அழியாமல் வளர்ந்து வருவதன் காரணம், நாவலரும் பாவலரும் நயம்படவுரைத்து நலம் தோன்ற நூற்கள் இயற்றி, அவற்றைப் பண்பாடு வழுவா முறையில் மக்களுக்குப் பயிற்சி தந்து பாதுகாத்து வந்ததனுல் என்பது தமிழ் வரலாறு காண்பார் காணும் உண்மை. எண்ணிறந்த இலக்கியங்களும் இலக்கண நூற்களும் மலியப் பெற்ற தமிழ் மொழியில் தமிழ் மக்கள் பயிற்சி பெறுவதற்கு நம் முன்னோர் வகுத்த முறைகள் காலத்தினுல் பழமையான தெனினும் தற்காலப் பயிற்சி முறைகளுடன் எவ்வகைகளில் அவை ஒத்தும் மாறுபட்டும் நிற்கின்றன என்பது பற்றி சிறிது சிந்திப்போம்.

'கல்வி கரையில கற்பவர் நாள்சில' என்ற உரையாலும் 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என்ற உரை யாலும் கல்வியின் விரிந்த கிடக்கை யாலும் கண்டு தெளியும் நிலையிலில்லை என்பது பெறப்படுகிறது. கற்றலாகிய தொழிலின் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல் கல்வி. இதன் பொருள் அறி யாமையைத் தோண்டுதல் என்பதாகும். அகத்தே நிறைந்து அறிவின் மேல் படிந்து மறைக்கும் அறியாமையைத் தோண்டி நீக்கும் போது அறிவொளி தானுகத் தோன்றும், என்று பொருள் படும்படி கற்றலுக்கு கல்வி எனக்கூறினர். இஃது தற்காலத்தவர் கூற்றுப்படி 'கற்பித்தல் என்பது திணிக்கப்படுவதொன்றல்ல திரட்டி வெளியிலெடுத்தலே யாகும்', (Teaching is not pouring in but drawing out) என்ற கருத்திற்குப் பொருத்தமாயிருப்பதை நாம் உணரலாம். மேலும் கற்றலை Learning the three R'S என்கிருேம், இதைத்தான் வள்ளுவரும் கல்வி என்ற அதிகாரத்தில் 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்—கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்று குறிப்பிடுகின்ருர். இதில் எண் என்பது கணிதத்தையும்

எழுத்து என்பது, எழுதலும் எழுதியதை வாசித்தலும் ஆகிய பயிற்சிகளைப் பெறுதலையும் குறிக்கும். ஆகவே தமிழ் மக்களுக்கு நெடுங்காலத்திற்கு முன்னிருந்தே, காலங்கடந்தாலும் கருத்துச் சிதைவுறாத கல்விக் கொள்கை இருந்து வந்திருக்கின்றது என்பது புலப்படும்.

தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் வழிநூலாக வழங்கும் நன்னூலின் பொதுப்பாயிரம் என்ற நூன்முன்னுரையில் நூலினது வரலாறு, நூல்கற்பிக்கும் ஆசிரியனது வரலாறு, பாடஞ் சொல்லலினது வரலாறு, மாணாக்கனது வரலாறு, பாடங் கேட்டலின் வரலாறு என்ற ஐந்து பகுதிகளைக் காணலாம். இப் பகுதிகளில் கூறும் கருத்துக்களைக் கொண்டு நம் முன்னவர் கண்ட கல்வி பயில் முறை எத்தகைத்து என்பதைக் ஈங்கு காண்போம்.

பொதுப்பாயிரத்தின் முதற்பகுதியில் நூலின் இயல்பும், நூல் கற்போர்க்குத் துணைபுரியம் உரையின் இயல்பும் விரிவாகக் கூறப்படுகிறது. நூல் கற்றலின் பயன் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பயன்களையும் அடைதல் என ஆசிரியர் குறிப்பிடுகிறார். எனவே அக்காலத்து கல்வியின் நோக்கம் உலக வாழ்க்கைக்கு உதவுவது மட்டு மன்றி மோட்சமாகிய வானுலகத்துப் பேரின்ப வாழ்க்கைக்கும் வழிசெய்வதாகும் என்று தெரிகிறது... இதற்காக எத்தன்மையதான நூல் இயற்றப்பட வேண்டும் என்று முதலிலேயே இலக்கணம் கூறியிருக்கிறார். ஆனால் நாமோ இவ்வுலக வாழ்க்கையில் மக்கள், மக்களாக வாழத் தயாராக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டு அதற்குத் தகுந்த நூல்களைத் திருத்தி ஆக்குவதில் முழு மூச்சையும் செலவிட்டு வருகிறோம். இதனை காலத்திற்கு ஏற்ப மாறுபாடடைந்த மனப்பாங்கு என்று கூறலாம்.

இரண்டாவதாகக் கூறப்படும் ஆசிரியனது வரலாற்றுப்பகுதியில் முதலில் நல்லாசிரியனின் இலக்கணம் கூறப்படுகிறது. அஃது இதோ:

"குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோ (டு) உயர்குணம் இணையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே."

நல்லாசிரியன் என்று ஒருவன் கூறப்படுவதற்கு அவனிடம் உயர் குடியில் பிறந்த சிறப்பு, கருணையுள்ளம், கடவுள் அன்பு ஆகிய இவற்றினால் எய்திய மேன்மை, பல நூல்களிலே பழகிய தேற்றம்,

நூற்பொருளை மாணக்கர் எளிதில் உணரும்படி தொடுத்துச் சொல்லும் ஆற்றல், நிலத்தையும் மலையையும் தராசுக்கோலையும் பூவையும் ஒத்த குணங்கள், உலகநடையை உணரும் அறிவு ஆகிய இவை போன்ற பிற நற்குணங்களும் நிறைந்திருக்க வேண்டும் என்பது விதி. உயர் குடிப்பிறப்பு என்பதற்கு மேன்மையான பரம்பரை (Better heredity) உடையவன் என்று கொள்ளலாம்.

நிலத்தை நல்லாசிரியனுக்கு உவமானமாகக் கூறக்காரணம் பார்வைக் கெட்டாது பரந்து கிடக்கும் நிலத்தைப் போன்று பரந்த நூலறிவும், தன்னை நெருங்கி ஒருவர் வாதஞ் செய்ய வந்தவிடத்து கலங்காத வலிமையும், அகழ்பவரைத் தாங்கும் நிலத்தைப் போல தன்னை மாணவர் போன்றார் இகழ்ந்துரைக்கும் காலத்து பொறுக்கும் பொறுமையும், உழைப்பிற்குத் தகுந்த பலனை நிலங் கொடுப்பது போன்று தன்னிடம் மாணக்கர் செயயும் முயற்சிக்கு ஏற்ற பயனைக் கொடுக்கும் குணமும், ஆசிரியனிடம் அமைந்திருக்க வேண்டும் என்பதேயாகும்.

மலையை உவமானமாகக் கூறக்காரணம் அளப்பதற்கரிய தோற்றமும் வலிமையும் மலைக்கு இருப்பதுபோல் பிறரால் அசைக்க முடியாத கல்வியறிவும் உளத்திடமும், நெடுந்தூரத்திலுள்ள வர்க்கும் மலை உயர்ந்து காட்சி தருவது போல் யாவராலும் அறியத்தக்க கல்வி உயர்ச்சியும், மழையின்றி வறண்ட காலத்தும் தன்னைச் சார்ந்தார்க்கு நீர்வளம் கொடுத்துக் காக்கும் மலையைப்போன்று பொருள் வளம் குன்றிய காலத்து தன்னைச் சேர்ந்த மாணக்கருக்கு கல்விப் பொருளைக் கொடுக்கும் கொடைத்திறனும், ஆசிரியனிடம் இயல்பாக இருக்க வேண்டும் என்பதேயாகும்.

தராசுக்கோலை உவமானமாகக் கூறக்காரணம் நடுவுநிலைமையான மனப்போக்கும், பொருள்களினியல்பை தராசுக்கோல் போன்று ஐயந்திரிபற எடுத்துக் காட்டுந் தன்மையும் ஆசிரியன் பெற்றிருக்க வேண்டும் என்பதே.

பூவை ஆசிரியனுக்குப் பொருத்திக்காட்டக் காரணம், பாடம் சொல்லும்போது பூவைப்போன்ற கவர்ச்சியான மலர்ந்த முகத்தினனாகவும், மங்கல காரியத்திற்கு யாவரும் பூவைச் சிறப்பித்து வைத்துக் கொள்வது போன்று யாவராலும் விரும்பி ஏற்றுக்கொள்ளுந் தகைமை யுடையோனாகவும், மெல்லிய மனம் படைத்தவனாகவும் இருக்க வேண்டும் என்பதாம்.

அடுத்ததாக ஆசிரியர் ஆகாதவர் இலக்கணம் அறையப் படுகின்றது. அதனை ஆக்கியோன் வாக்கிலே காண்போம்:

"மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலுங்
கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பன முரண்கொள் சிந்தையும்'
உடையோ ரிலரா சிரியா ஆகுதலே"

இங்கு மொழிகுணம் இன்மை என்றது பாடஞ்சொல்லும் குணம் இல்லாமையையாகும்; இழிகுண இயல்பு என்றது இயற்கை யாகவே அமைந்திருக்கும் இழிகுணங்கள். முன் நல்லாசிரியரி லக்கணத்தில் 'குலம்' என உயர்குடிப் பிறப்பித்துக் கூறக்காரணம் அவர்க்கு இயற்கையாகவே நற்குணங்கள் அமைந்திருக்கும் என்ற கருத்தை உள்ளுரையாக வைத்து என்பது, பின்னர் 'இழிகுண இயல்பும்' என ஆசிரியர் ஆகாதவரைப் பற்றிக்கூறுவதிலிருந்து புலப்படுகிறது. தவிரவும் பொருமை, பொருளின்மேல் அதிக ஆசை, மெய்ப்பொருளை மறைத்து பொய்ப்பொருளைக் காட்டி வஞ்சிக்கும் தன்மை, கேட்பவருக்கு அச்சம் உண்டாகப் பேசும் பேச்சு ஆகிய குறைபாடுகள் உடையவர்களும், கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு ஆகிய நான்கையும் ஒத்து மாறுபட்ட கருத்தைத் தம்மிடம் வந்தவருக்குக் கற்பிக்கும் இயல்புடையவர் களும், ஆசிரியர் பணியிலீடுபட அருகதையற்றவர் ஆவார்கள்.

கழற்குடம் என்பது கழற்காய்கள் இடப்படும் குடம். இதனுள் காய்களை இட்டு அதிலிருந்து திரும்ப எடுக்கும்போது முன்னிடப் பட்ட வரிசை முறையில்லாமல் பிறழ்ந்து வெளிவரும். இதே போன்று திட்டமிடாதமுறையிலும், பாடங்களை ஒழுங்கற்ற முறையிலும் ஆசிரியனுகத் தகுதியற்றவன் பிறர்க்குச் சொல்லுவான். ஆதலின் கழற்குடம் அவனுக்கு உவமையாயிற்று.

மடற்பனை என்பது தன்னுரு முழுதும் மடல்களால் மறைத் துக் கொண்டு நிற்கும் பனைமரம். இது தன்னை நெருங்கி வந்து பிறர் கனி கொய்ய விடுவதில்லை; அது தானுகக் கொடுத்தால்தான் பிறர் கொள்ளமுடியும். இஃதே போன்று இவ் வாசிரியனும் தன்னிடமுள்ள நூற்பொருள்களைத் தானுகச் சொல்ல பிறர் அறிந்து கொள்ளமுடியுமேயன்றி அவனிடம் நெருங்கி வந்து நூற்பொருளைக் கேட்போர்க்குச் சொல்லாத குணத்தையுடையவனுதலின் மடற்பனை அவனுக்கு உவமானமாகக் கூறப்பட்டது.

பருத்திக் குண்டிகை என்பது பருத்தி நிறைத்து வைக்கப் படும் குடுக்கை. இக்குடுக்கையினுள் பருத்தி அடைக்கும் போதும் கூட சிறிது சிறிதாகத்தான் தன்னுள்ளே பஞ்சைக்கொள்ளும். பின்

பஞ்சை வெளியில் எடுக்க முயற்சித்தால் எளிதில் வெளிக்கொடாத தன்மையுடையது. ஆசிரியன் ஆகத்தகுதியற்றவனும், தான் கற்ற காலத்து சிறிது சிறிதாக மிக வருந்திக் கற்று, அதை பிறர்க்கு எளிதில் கொடாததன்மை யுடையவன். எனவே பருத்திக் குண்டிகை அவனுக்கு உவமானமாயிற்று.

முடத்தெங்கு ஆசிரியனே, தண்ணீர் வார்த்து வளர்ப்ப வருக்குக் காய்கள் கொடாது, சரிந்து வேலிக்கு அப்புறம் சென்று அடுத்தவர்களுக்குக் காய்களைக் கொடுக்கும் முடத்தெங்கைப் போலத் தன்னை அடைந்து வழிபாடு செய்து பாடங் கேட்போனுக்கு பாடஞ் சொல்லாது, வழிபாடு செய்யா பிறர்க்குக் கல்விப் பொருளைத் தருங் குற்ற முடையவன்.

எனவே இக்குறைபாடுகள் உடையார் ஆசிரியராகத் தகுதி யற்றவர்கள் என்பது மிகையாகாது. தன்னுயிர் காக்க, தன்மானம் பெற, உழைப்பிற்கேற்ற ஊதிய உயர்வு வேண்டும் என்று தற்கால ஆசிரியர்கள் எழுப்பும் உரிமைக் குரலுக்கும், "அவா" என்று பொருளாசையைப் பற்றி ஆசிரியராகாதவர் இலக்கணச் சூத்திரத் தின் இரண்டாமடியில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை என்பது நோக்கற் பாலது. மேலும் ஆசிரியர் பயிற்சிக்கு தகுதியுள்ளவர்களைத் தெரிந்தெடுத்து பயிற்சியளித் தால்தான் கல்விநிலை சீர்படும் என்ற கருத்தினை இப்பொழுது த்தான் நம்மவர் உணர்ந்து வருகின்றனர் என்பதும் உய்த்துணரற் பாலது.

நான்காவது பகுதியில் மாணக்கரது இலக்கணம் வரையறுக் கப்படுகிறது. ஓர் ஆசிரியின் யாவர் யாவருக்கு நூற்பொருள் சொல்லலாம் என்பதைப் பற்றி,

> "தன்மகனு, ஆசான் மகனே மன்மகன்
> பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே
> உரைகோ ளாளற் குரைப்பது நூலே"

என இங்ஙனம் பொதுப்படையாகக் கூறப்படுகிறது. தனது புதல்வன் தன் ஆசிரியனது புதல்வன், அரசனது புதல்வன், பொருளை மிகுதியாகக் கொடுப்போன், தனக்கு வழிபாடு செய்பவன், தன்னால் உரைக்கப்பட்டதை விரைவாகக் கற்கும் ஆர்வம் படைத்த வன், ஆகியோரே கற்பிக்கப்படத் தகுதியுள்ளவராக கருதப்படுகின் றனர். ஏழைக்கு இல்வசக்கல்வியும், ஏராளம் செல்வம் படைத்த வனுக்குப் பொருள் பெற்று அளிக்கும் கல்வியும், அக்காலத்திலிருந் திருக்கின்றது என்று அறியக் கிடக்கின்றது. பொருளிருந்தாலும்,

இல்லை யென்றாலும் ஆர்வமும் ஆற்றலும் உடையவர்க்கும் ஆசிரியர்கள் விரும்பி கல்வி கற்பித்து வந்தனர் என்பதும் 'உரை கோளாளற்கு உரைப்பது' என்று இறுதியடியின் மூலமாக உறுதி கட்டலாம். தன் மகனும், ஆசான் மகனும், மன் மகனும், வழிபடு வோனும், உரை கோளாளனும், சிறப்பாக எவ்விதக் குறைபாடுகள் நீங்கப் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதனை அடுத்ததாக ஆசிரியராகாதவர் இலக்கணத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அதனைப் பார்ப்போம்.

> ''களிமடி மானி காமி கள்வன்
> பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
> துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
> தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
> படிறனின் னோர்க்குப் பகரார் நூலே.

கள்ளுண்டு களிப்பவன், அதிசோம்பேறி, அகங்கார முடையவன், காம முடையவன், திருடன், நோயாளி, அறிவிலி, பிணங்கு பவன், கோபமுடையவன், மிகத் தூங்குபவன், புத்தி நுட்ப மில்லா தவன், பழைய நூற்களைக் கண்டு அஞ்சி தடுமாறும் உள்ளத்தை யுடையவன், அஞ்சத் தகுந்தவைகளுக்கு அஞ்சாதவன், பாவஞ் செய்வோன், பொய்பேசுவோன் ஆகிய நீக்கமுடியாத குறைபாடுடையவர்களுக்கு ஆசிரியர் நூலைச் சொல்லார் என்பதாகும்.

இப்பாட்டில் இரண்டாமடியில் கூறப்படும் 'ஏழை' என்ற சொல்லிற்கு பொருளில்லாதவன் என்று பொருள் கொள்வர் சிலர். பொருளற்றவனும் ஆசிரியனுக்கு பணிவிடைபுரிந்து பாடங் கேட் கலாம் என்று முன்னரே கூறப் பட்டிருத்தலின், அறிவில் ஏழை என்று கொள்வதே பொறுத்தமானது. எவ்வாறெனினும் நூல் கற்கத் தகுதியற்றவர்களாக மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினர் அக்காலத்தில் ஒதுக்கப்பட்டனர் என்று தெரிகிறது. இஃது இக் காலத்துக் கட்டாயக் கல்வித் திட்டத்திற்கு (Compulsory Education) முரண்பாடுடையதா, அன்று என்று சிந்திக்கற் பாலது. மேலே கூறப்பட்டுள்ள இலக்கணப்படி செய்யப்பட்ட தணிக்கை அ, ஆ கற்பதற்கும் அவர்கள் தகுதியற்றவர் என்பது அல்ல; அகநானூறு போன்ற இலக்கியப் பூங்காவில் நுழைந்து நூல்மணம் நுகர்வதற்கும் அறிவுப் பிணிபோக்கும் ஆசிரியராகத் திகழ்வதற்குரிய கல்வி பெறுவதற்கும் மாத்திரம் தகுதியற்றவர் என்ற கருத்தில்தான் கூறப்பட்டிருக்கிறது என்பது 'பகரார் நூலே' என்ற சொல் முடிவிலிருந்து புலனாகும்.

இறுதியாக உள்ள ஐந்தாவது பகுதி மாணுக்கன் ஆசிரியனி டம் பாடங்கேட்கும் முறைமையைப் பற்றிய விளக்கமாகும். பாடங் கேட்க விரும்பும் மாணுக்கன் ஆசிரியனுக்குப் பணிந்து வழிபாடு செய்தலில் வெறுப்பில்லாதவனுகி, ஆசிரியனின் குணத்தையும் குறிப்பையும் அறிந்து நடந்து, இரு என்று சொன்னபின் உட் கார்ந்து, பசியுடையவன் உணவை விரும்பி உண்பதுபோல பாடங் கேட்டலில் ஆசையுடையவனுகி, ஓவியத்தில் தீட்டப்பற்ற பாவை யைப் போன்று ஒரே நோக்குடன் காது வாயாகவும் மனம் கொள்ளு மிடமாகவும் பாடங்கேட்டு, கேட்டவற்றை மறந்துவிடாது மனதில் நிறைத்துக்கெண்டு ஆசிரியன் போ எனச் சொன்னபின் போதல் வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆசிரியன் பாடஞ் சொல் லும்போது மாணுக்கன் ஓவியப் பாவைபோல் இருந்து கேட்கவேண் டும் அல்லது கேட்டான் என்ருல், அக்காலத்து ஆசிரியனின் பாடஞ் சொல்லுந் திறன் மாணுக்கர்களின் உள்ளங்களே தன்பால் ஈர்த்திழுக் கும் ஆற்றல் படைத்ததாக இருந்திருக்கின்றது என்பது தெளி வாகிறது. மன்னவன் கட்டளேப்படி குதிரைகள் வாங்கச் சென்ற மணிவாசகப் பெருமானும் தான் கருதிச் சென்ற கருமம் மறந்து மரத்தடியிலே மாதொருபாகன் செய்து கொண்டிருந்த அருள் உரையிலே கட்டுண்டு நின்ருர் என்பதை எண்ணிப் பார்க்கும்போது அவரும் அப்போது ஓவியப் பாவையாகத்தானே மாறியிருக்க வேண்டும் ? இதோ ஆசிரியர் வாக்கின் போக்கு.

கோடன் மரபே கூறுங் காலேப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்
திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்னவார் வத்த னுகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னுகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனுர் புலவர்

மேலே பாடங்கேட்டலினது வரலாற்றைப் பற்றிப் பார்த் தோம். இனி மாணுக்கர் நூலேக் கற்றலின் இயல்பைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதைக் காண்போம். மாணுக்கன்தான் கற்ற பொரு ளினே உலகவழக்கு, செய்யுள்வழக்கு ஆகிய இருபாங்கினேயும் (Practice and Theory) ஒட்டி ஆராய்ந்தறிதலும் மூல பாடங்களே மறவாது பாதுகாத்தலும் கேட்ட பொருள்களே பல்காற் சிந்தித்தலும் ஆசிரியனே யடுத்து அவைகளேத் தன் மனத்துள் அமையும்படி

மீண்டும் கேட்டலும் அவ்விதம் கற்கும் தொழிலையுடைய பிற மாணுக்கரோடு பழகுதலும் தான் ஐயுற்ற பொருளை அவரிடத்து வினவி தெளிவு பெறுதலும் அவர்கள் வினவியவைகளுக்கு விடை கூறலும் என்று சொல்லப்படும் இச்செயல்களை முறையாகக்கொண்டு தன்னிடத்துள்ள அறியாமையைப் போக்கிக் கொள்ள வேண்டும். இதனை

நூல்பயில் இயல்பே நுவலின்வழக் கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினதல் வினயவை விடுத்தல் என்றிவை
கடனக் கொளினே மடநனி யிகக்கும்

என்று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்ருர். மேலும் இச் சூத்திரத்திலிருந்து குழுமுறையில் கற்றல் (Group studies), விவாத முறையில் விளக்கம் பெறுதல் (Discussions), அரங்கு செயல் முறையில் கற்றல் (Workshops) ஆகிய தற்காலத்தவை என்று கருதப்படும் முறைகளும் அக்காலத்தில் சிறிது மாறுபட்ட முறையில் இருந்து வந்திருக்கின்றன என்று எண்ண இடமிருக்கிறது.

அடுத்ததாக, ஆசிரியனவதற்கு விரும்பிப் பாடங் கேட்போன் எப்பொழுது முழுப்புலமை பெறுகிருன் என்பதை நிர்ணயிக்க நன்னூலார் உபயோகிக்கும் அளவுகோலைச் சிறிது பார்ப்போம். ஒரு நூலை இருமுறை ஒருவன் கற்ருனகில் அந்நூலில் மிகுதியாக ஏற்படும் பிழையைத் தவிர்த்தவனவான் என்றும் மூன்றுதரங் கற்பானயின் தனக்கு ஆசிரியன் கற்பித்த முறையில் பிறர்க்கு கற்பிக்கும் பயிற்சி பெற்றவன் ஆவான் என்றும் ஆக இவ்விதம் பெற்றது புலமையில் கால்பங்குதான் என்று கூறிவிட்டு பின் எஞ்சியுள்ள முக்காற் பங்கு புலமையைப் பெற ஆசிரியனகை விரும்புவன் தன்னைப்போல் கற்குந் தொழிலுடையாருடன் பழகும் வகையால் ஒரு கால்பங்கும் தன் மாணுக்கருக்கு கற்றவற்றை விரித்துரைத்தலால் ஒரு கால்பங்கும் கற்ருேர் அவையில் உரை நிகழ்த்துதலால் ஒரு கால்பங்குமாகப் பெற்று முழுப்புலமையுடைய ஆசிரியனகை வேண்டும் என்று திறன் ஆய்வு கூறுகிருர். இது நான்கு சிறு சூத்திரங்களாகக் கூறப்பட்டிருக்கிறது.

இறுதியாக மாணுக்கன் ஆசிரியனுக்கு வழிபாடு செய்யும் முறையைப் பற்றிக் கூறுமிடத்து ஆசிரியர் மாணுக்கர் தொடர்பை எளிதில் விளங்கச் செய்ய எடுத்தாளும் உவமை நயம் எண்ணி யெண்ணி இன்புறற் குரியது.

அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி
நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமொடு
எத்திறத் தாசான் உவக்கும் அத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே

குளிர்காய்வோன் நெருப்பை நெருங்காதவாறும் அஞ்சி விலகிச் செல்லாதவாறும் இருப்பதுபோல் ஆசிரியனிடம் பழகி, நிழலைப் போல அவனைப் பின் தொடர்ந்து, அன்பு நிறைந்த நெஞ்சமோடு ஆசிரியனின் மகிழ்ச்சிக்கு ஏற்பநடந்து அறத்தினின்றும் மாறுபடாது நடத்தலே மாணவன் ஆசிரியனுக்குச் செய்யும் வழிபாடு என்பது அதன் பொருள். 'அறத்திற்றிரியா' என்று குறிப்பிடுவதனால் அவன் செய்யும் வழிபாடு உலகத்து ஆன்றோர் ஒப்புக் கொள்ளும் அறநெறிகளுக்கு ஏற்ப இருக்கவேண்டுமே யன்றி அவற்றிற்கு முரணான எந்தவிதமான பணிவிடைகளும் மாணாக்கன் செய்யவோ ஆசிரியன் பெறவோ கூடாது என்பது பெறப்படும்.

இவ்வாறாக நம் முன்னோர் கல்வி பற்றி வழங்கிய கட்டுரைகளைப் பார்த்தோம். அம் முறைகளை தற்காலக்கல்வி முறைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் அத்துறையில் அடைந்திருக்கும் முன்னேற்றம் மிகப் போற்றற் பாலது. உள நூலறிவு விரிவு பெறாத அக்காலத்தில் நூலிற்கு முதலிடமும் கற்கும் மாணாக்கனுக்கு இரண்டாம் இடமும்தான் தரப்பட்டது. ஆதலின் தான் ஒவ்வொரு நூலையும் பற்றிக் கூறும்போது கற்கத் தகுதியுடையார் யாவர், தகுதி யற்றவர் யாவர் என்று குறிப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. தற்காலத்தில் கல்விச் சார்புடைய உள நூல் அறிவைக் கொண்டு மாணவருக்கு முதலிடமும் நூலிற்கு இரண்டாம் இடமும் கொடுக்கின்றோம். நூல் கற்கத் தகுதியற்றவராகத் தள்ளப்பட்ட மாணாக்கர் வகையினரையும் தற்காலத்தில் நாம் சூழ்நிலை மாற்றத்தினாலும் பிற வழிகளினாலும் திருத்தி நன்மாணாக்கர் ஆக்க முயற்சிக்கின்றோம். ஏனெனில் நாட்டு மக்கள் யாவருக்கும் கட்டாயக் கல்வி குறிப்பிட்ட வயது வரை அளிக்கப்படவேண்டும் என்று அரசியல் சட்டத்திலேயே தீட்டப்பட்டுள்ளது. எனவே ஏராளமாக ஆசிரியர்களின் சேவை நம் நாட்டிற்கு இன்றியமையததாகிறது. இவ் வாசிரியர்கள் உடற் கூறிலும் பருவமுதிர்ச்சியிலும் இயற்கை அறிவிலும் வேறுபாடுகள் கொண்ட சிறுவர் சிறுமியர்களுக்கு எழுத்தறிவிக்கும் இறைப்பணியில் ஈடுபட வேண்டியிருக்கிறது. குறைந்த காலத்தில் கூடுதல் பலனைப் பெற அனுபவத்திலும் ஆராய்ச்சியின் அடிப்படையிலும் உருவாகிய கல்வி கற்பிக்கும் முறைகள் தேவைப்படுகின்றன, ஆதலினால் தான் முற்காலத்தில் இல்லாத ஆசிரியர் பயிற்சி இக்

காலத்தில் பயிற்சிப்பள்ளிகள் மூலமாகவும், கல்லூரிகள் மூலமாகவும். ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிறது.

ஆகவே கல்வி கற்பிக்கும் தொழிலாகிய கடலில் அறிவுப் பாரம் தாங்கிச் செல்லும் கப்பலாகிய நுவல்வோன் (Preceptor), அறிவுச் செல்வத்தை ஏற்றுக்கொள்ளக் காத்து நிற்கும் துறைமுக மாகிய கொள்வோனை (Pupil) அணுகி அளிக்க கலங்கரை விளக்க மாக வழிகாட்டி நிற்கின்றது நம் தியாகராசர் நுவல்வோற் கல்லூரி என்பது யாவராலும் இனிதுணரப்படும் என்பதற்கு ஐயம் என்னை.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினனே.

(நன்னூல் சூத்திரம் 462)

கற்ற தனாலாய பயனென்கொல் வாலறிவ
னற்று டொழா அ ரெனின்.

—திருவள்ளுவர்

நாடென்றால் தென்னாடே நல்லமொழி என்றால்
ஏடறியும் செந்தமிழே என்பாரால

—பீடுயர்த்தும்

சோறான் மடை யடைக்கும் சோணாட் டுக்காவிரியே
ஆற்றிலுயர் வென்பார் அறி.

—கவிஞர் கதி சுந்தரம்

வளமதுரைச் சிறப்பு

அ. நாராயணப் பெருமாள் பி. ஏ., (பி. டி. மாணவன்)

சீரமர் பொதிகைச் செல்வத் தமிழகப்
பேரமர் பாண்டிய மன்னர் முன்னாள்
வைகைத் தென்பால் வாகாய் வளமாய்
எய்யா தமைத்து இறைவனோ டிருந்து
மெய்யார் புலவரும் மகிழ்வாய்க் கூடி
பொய்யா நாவால் பன்னூல் யாத்து
தமிழை யாய்ந்த தனிப்பெருந் தலமாய்
இமிழ்திரைப் பெளவத் தண்மையி லாங்கண்
செய்யோர் திருப்பணி செய்து நன்றே
எய்திய தொல்பதி கூடல் தன்னுள்
தமிழ்வளர் சங்கந் தான தமைத்து
அமல னருளால் அமைந்தே யாங்கு
ஆற்றிய நிலையும் ஊற்றிய கலையும்
போற்றியே ஏற்றிப் புகழ்ந்து திகழ்,
மங்கை நல்லாள் மங்கம் மாள்தன்
பொங்கும் ஆட்சியின் புனிதம் பொலிய;
தமிழின் தகைமை தாரணிக் கென்றும்
அமிழ்துறு பொருளென அகிலம் பரப்பி
திக்கெலாம் பொலியச் செம்முறை வளர்த்து,
தக்கதோர் சாட்சியாய் தாய்மீ னாட்சி
சொக்கரின் துணையாய்ச் சிறக்கும் தலமாம்;
நாயக்கர் மாலும் நாமிகப் புகழும்
தாயாம் மாரி யம்மன் குளமும்
தப்பாக் கலைத்திறன் ததும்ப அமைத்து
பற்பல இனமும் குலமும் பாங்காய்
அற்புத மமைய அமைத்த நற்பதியாம்;
அதுவே இன்னும் அழகுறும் வண்ணம்
புதுமுறை நெளிய பொற்கலை ஒளிர
வீதிகள் தோறும் பாலியர் விரும்பி
ஓதுயர் சாலைகள் உயர்நிலைப் பள்ளிகள்;
வடபால் அமெரிக் கன்கல் லூரியும்
தொடர்பாம் லேடி டோக்கல் லூரியும்
தென்பால் திகழ்ம துரைக் கல்லூரியும்
இன்பாய்க் கீழ்பால் இயைந்த பொழிலுள்

இணையில் தியாக ராசர்கல் லூரியும்
மணமுறு தென்றல் மகிழ்ந்தே உலாவும்
அரச மரத்தடி யண்மி அமைந்து
சிரசாய்ச் சொலித்து சேவைகள் புரிய,
தந்நலம் நாடாத் தகைசா லாட்சி
நந்நலம் நாட்டில் நாளும் உயர்ந்திட
இந்நில நன்மைகாண் இணைப்புச் சேவை
தனனகம் கொண்டே தக்கோர் தண்கலைத்
தந்தைநம் தியாக ராசர் நற்பெயரில்
ஆசிரியர் பயில் அணிகல் லூரியும்;
அத்துடன் இணைந்த நன்முறைப் பள்ளியும்
கண்கவர் வனப்பும் கலைநிறை மதிப்பும்
எண்ணரும் வளமும் தன்னிகர் நலமும்
சோலைப் பலனும் வேலைத் திறனும்
சாலைகள் சத்திரம் சார்தொழிற் சாலையோ
டேகமாய் அமைந்து எழுசுட ராகிடும்
நாகார் நம்பதி மதுரை கண்டால்
ஆகா! அதனைப் புகழா தமை வரோ!
வாழ்க தமிழகம்! வளர்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ்நிறை மதுரைவா ழியவே!

ஒழுக்கம் என்ற கொடி பக்தி என்ற கொம்பிலே, பற்றிப் படர்ந்தால் தான் ஒழுக்கம் நிலைபெற்றிருக்க முடியும். எங்கணும் நீக்கமற நிறைந்து செயலோடன்றிச் சிந்தையையும் கண்காணித்து வருகின்ற ஒரு கடவுள் உண்டு என்று நினைக்கின்றபொழுதுதான் அவன் சிந்தையாலும் செயலாலும் பிறருக்குத் தீங்கிழைக்காமல் வாழ முடிகிறது.

—குன்றக்குடி அடிகளார்.

சீர்திருத்தச் செம்மல் "ஷா"

மு. நாக சுந்தரம் பி. ஏ., (பி. டி. மாணவன்)

"மனிதன் புலியைக் கொன்ருல் அது விளையாட்டுக்குச் செய்யும் வேட்டை. புலி மனிதனைக் கொன்ருலோ மிருகத்தனம். குற்றத்திற்கும் நீதிக்கும் இடையேயுள்ள தொடர்பு இதனைப் போன்றதே".

"அடிபட்டவன் உன்னைத் திருப்பி அடிக்காவிட்டால் எச்சரிக்கையாயிரு. ஏனெனில் அவன் உன்னை மன்னிப்பதுமில்லை, நீ அவனை மறக்கமுடிவதுமில்லை".

"புகழ்பாடுங் கூட்டத்தை உண்டாக்குவதே அரசியற்கலை".

"முட்டாள்கள் நிறைந்த நாட்டில் அரசன் கடவுளாகிருன். எல்லோரும் அவனை வணங்குவார்கள். ஆனுல் எவரும் அவனுடைய விருப்பத்தை நிறைவேற்ற மாட்டார்கள்".

"ஆகாயத்தில் ஆண்டவனை வைத்திருக்கும் மனிதனிடம் ஏமாந்து விடாதே".

"நான் எழுதும் நாடகங்களில், கதைகளில், கட்டுரைகளில் குறியீடுகள் இடுதல் தேவையில்லை. குறியீட்டுகளின் உதவியுடன் தான் எதையும் படிக்க இயலும், நண்பர்கள் எனது நூற்களைப் படிக்கவேண்டியதில்லை. பொருளை ஆய்ந்துணர்ந்து தெளிவுபெறும் சிலர் மட்டும் என் நூற்களைப் படித்தல் போதுமானது".

"கல்லறையிலிருந்து 'ஷேக்ஸ்பியர்' எலும்புக் கூட்டைத் தோண்டி எடுத்து அதன்மீது கல் கொண்டு தாக்கினுல்தான் நான் அவர்மீது கொள்ளும் அளவுக்கு மிஞ்சியதோர் சினத்திற்கு சமன் செய்தல் முடியும்".

இன்னேரன்ன புரட்சி எழும் கருத்துக்களைச் செப்பிச் சென்றவன் அஞ்சாநெஞ்சன், அயர்லாந்தின் அரும்பெரும் செல்வன், பார்குலுக்கும் மனத்திறன் சான்ற பேரறிஞன், தான் வீழினுமென், தன் மனத்திறன் சான்ற கொள்கை, செம்பரிதியூர்ந்து செருக்குப் பெற வேண்டுமென விழைந்த பெரியோன் பெர்ஞட்ஷா.

அயர்லாந்து நாட்டிலே 1859-ல் இனியமது நாடித்திரிந்த தந்தைக்கும், இன்னிசையில் ஈர்க்கப்பட்டுழலும் தாய்க்கும், ஒரே மகஞக டப்ளின் நகரில் பிறந்தார். 'அவையத்து முந்தியிருக்க'த் தக்க கல்வி அளிப்போம் மைந்தனுக்கு என எண்ணவில்லை தந்தை.

தந்தைதான் கடமையை நழுவவிட்டார் எனினும், தாய்கூட அதனை நிறைவேற்ற முடியவில்லை. தந்தையின் உதவியோ, தாயின் அரவணைப்போ அற்ற தனயன் தன்னறிவுப் போக்கின்படி நடக்கத் துவங்கினான். இளமையிலே மனதிலே ஊன்றிய இத்தன்னறிவுப் போக்கே ஷாவின் வாழ்க்கை இறுதிக் கோடு வரை நீடித்தது. தன்னறிவு மறுத்த எச்செயலையும் செய்ய ஷா முயலவில்லை. அதனால் பள்ளிப் பருவத்தில், பள்ளிக்கூடத்தில் மதிப்பிடத்தக்க எதையும் கற்கவில்லை ஷா. தங்கள் போக்கிற்கு, விருப்பிற்கு மாறாக எதையும் குழந்தைகளைக் கற்குமாறு வற்புறுத்துதல் மன்னிக்க முடியாப் பெருங்குற்றம் என்ற உளங்கொண்டவர் ஷா. 'குழந்தை மனத்திறன் ஆய்ந்த கல்வியே நலஞ்செய் கல்வியாம்' என்ற ரூசோ, 'புரோபல்' போன்ற அறிஞர்களின் உள்ளக் கிடக்கையையே ஷாவின் இளமைப் பருவ அனுபவ அறிவு ஆணித்தரமான அடிப்படையாகக் கொண்டது.

பள்ளியில் முறையாகப் பயிலவில்லை யெனினும் தான் நூற்களைப் படிக்குந் திறன் பெற்ற காலம் முதல் தன் இயல்பிற்கு ஏற்ப தன் மனத்திற்குகந்த நூற்களைப் படிக்கத் துவங்கினார் ஷா. பத்தாம் வயதின் எல்லைக் கோட்டை எட்டிய ஷா, விவிலிய நூலின் அமைப்பை, "சேக்ஷ்பியரின்" நாடகங்களின் அமைப்பை, ஆய்ந்துணர்ந்து அறிவு பெற்றவரானார். தனது பன்னிரண்டாம் ஆண்டின் முடிவிலே, சார்லஸ் டிக்கன்ஸின் எழுத்தோவியங்களைப் பற்றிச் சிந்தித்து முடிவுகாணும் வாய்ப்புப் பெற்றவரானார் இனிமையிலே அறிவிலே முதிர்ந்தஷா. தாயின் இசை ஆர்வமும் தனயனின் இசையறிவுக்கு வழிகாட்டிற்று. இசைத்துறைப் புலவரானார் இலக்கியத்துறையினிற் தேர்ந்த இருப்பது வயதுஷா. பள்ளியில் முறையாகப் பயிலவில்லை யெனினும் பயிலத்தக்க நூற்களை இதற்குள் படித்து முடித்து விட்டார் ஷா.

இயல் இசை இரண்டினிற் தேர்ந்த ஷா ஏனோ நாடகத்தினுள் உடனே ஒன்றிவிடவில்லை, சிரிப்பினையெழுப்பி அதேஞான்று சிந்தினையைக் கிளப்பிச் சிறந்த நாடகங்களைச் சமைத்த இச்சிந்தனைச் சிற்பி சிறு கடையொன்றிலே சில்லரை வரவு செலவு கணக்குகளைக் குறித்து வைக்கும் கணக்காயராகத்தான் முதன் முதலில் தொழில் துவக்கினார். தன்னறிவுப் பாதையில் ஒழுகும் இவருக்குச் சின்னாட்களில் இவ்வடிமை வாழ்வில் வெறுப்புணர்ச்சியேற்பட்டது. எனினும் எவ்வாறோ ஐந்து ஆண்டுக் காலத்தை இத்தொழிலில் கடத்திவிட்டுப் பிறகு 1876ல் அதைத் துறந்து இலண்டன்மானகரடைந்தார்.

இப்பொழுதுதான் தனது சிந்தனைக்குத் தக்க வேலை கொடுக்கத்துவங்கினர்ஷா. தாயின் உழைப்பிலே இருந்து கொண்டு கதை, கட்டுரை எழுதுவதற்குத் துவங்கினர். எனினும் ஆரம்பத்திலே அவரது எழுத்துக்கள் அவரைக் காக்க முயலவில்லை. 1876 லிருந்து 1885க்குள் ஆன ஒன்பதாண்டு காலத்திலே, ஐந்து பெருங் கதைகளை உருவாக்கிய இவர், ஆறு பவுன்கள் வருவாயே தமது எழுத்துக்காகப் பெற்றார்.

இதிலும் ஐந்து பவுன்கள் இவர் எழுதிக்கொடுத்த மருந்து விளம்பரத்திற்குப் பெற்ற கூலியேயாகும். வறுமைப்பிணி ஷாவை அவரது இளமை இலக்கியக் கனவுகளிலிருந்து எழுச்சிபெறச் செய்தது. எழுத்தாளனின் உண்மை உருவை அவருக்கு உள்ளங் கை நெல்லிக்கனியென உணரவைத்தது. இவ்வுணர்வே அவரது 'மனிதனும் சிறந்த மனிதனும்' நூலிலே வெளிப்படுகிறது, "உண்மைக் கலைஞன் தனது மனைவியைப் பட்டினி கிடக்கச் செய்வான். தனது குழந்தைகளுக்குக் காலணிகள் இல்லாது கூடநடக்க விடுவான். தனது எழுபதாண்டு நிரம்பிய தாயைக்கூட உணவிற்காகப் பாடுபடப் பார்ப்பான். எத்தொழிலையும் விடத் தனது கலையிலே அதிகமான ஆர்வத்தோடு ஈடுபடுவான்" எனச்சொல்லும் 'டானர் எனும் பேராசிரியர் கூறுவதாககூறும் இவர் கூற்று இதனையே விளக்குகிறது.

எனினும் 1885ம் ஆண்டு இவரது வறுமைப்பிணிக்கு விடி வெள்ளியாயிற்று. 'ஸ்டார்' என்ற இதழுக்கு இசைபற்றி மதிப் பீடளிக்கும் பொறுப்பேற்றார் இப்போது, 'திவோர்ல்டு' என்ற இதழிலும் வாரத்திற்கு 5 பவுன்கள் பெற்று இதே பணியைத் தொடர்ந்து செய்து வந்தார். இவரது 'இசை'மதிப்பீடு' யாவராலும் விரும்பிப்படிக்குந் திறன் பெற்றதாகத் திகழ்ந்தது. விருப்பு வெறுப்பின்றி எழுதப்பட்ட இவரது முடிவுகள் இசையிற் சிறந்த யாவரையும் இவர்பால் ஈர்த்தது. இவரது உரை நடை முறையும் சிறந்ததாக வளர்ச்சியுற்றது. இவரது உயரிய உரை நடையில் ஈர்த்த "சாட்டர்டே ரெவ்யு" (Saturday Review) பொறுப் பாளர்கள் இவரை நாடகங்கள், நடிகர்கள் நடிப்பு முதலியவை பற்றிய மதிப்பீடு அளிக்கும் பணியை யேற்கச் செய்தனர். குற்றங் கண்ட இடங்களிலெல்லாம் இவர் குறை கூறத் தயங்கியதில்லை. "சேக்ஷ்பியர்" நாடகங்களைக்கூட குற்றங்காணின் குற்றம் குற்றமே எனச் செப்புந்திறன் இவரிடத்தே இருந்தது. 'சேக்ஷ்பியரின்' நாடகங்கள் கூட்டிக் குறைத்து நடித்தலை இவர் வன்மையாகக் கண்டித்தார்.

ஆங்கில நாடக ஆசிரியர்களிற் சிறந்த 'சேக்ஷ்பியரை'க்கூடக் குற்றங்கண்ட ஷா, மற்ெருரு நாடக ஆசிரியரான இப்சினின் எழுத்துக்களில் நேர்மையைக் கண்டார்; அழகைக்கண்டார். அதனுல் எழுந்த தனது அன்பை, இப்சின்பால்தான் கொண்ட அன்பை—தன் கோட்பாட்டை 'இப்சன் போக்கின் அடிப்படைகள்' என்ற தம் நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

இத்தகைய புரட்சிகரமான மதிப்பீடு ஆங்கில நாடகக் கலையின் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தது. விவாகமுறிவு, நீதிமன்ற வழக்குகளின் சாரத்தைக் கோர்த்துப் புனைந்த நாடகங்கள் தோன்றியது மாறி, சமூக, மத, தத்துவ இயல்புகளைச் சித்தரிக்கும் நாடகங்கள் தோன்றக் காரணமாயிருந்தவை ஷாவின் மதிப்பீடுகளேயாம். தானும் எழுதத் துவங்கினுர்ஷா. சமுதாயத்தில் கீழ் நிலையைக் கிண்டலுடன் கலந்து நல்கும் நாடகங்களைப் படைக்கும் சிற்பியானுர்ஷா.

1882ல், ஹென்றி ஜார்ஜின் 'வளர்ச்சியும் வறுமையும்' என்ற நூலைப்படித்தஷா, சோஷியலிஷம்பற்றிய அறிவு பெற்றவரானுர். காரல்மார்க்ஷின் எழுத்துக்கள் இவ்வறிவை அகலப்படுத்திற்று. இதே அவரைப் பேபியன் கழகத்திற் பிணைத்துச் சிறந்த பேச்சாளராக்கிற்று. பேச்சுத் திறன் இவரைப் பேரறிஞர் வரிசையிற் சேர்ந்தவர் என்பதை மக்களுக்கு விளக்கிற்று இதனிடையில் செயின்ட்பான்கிராஸ் என்ற நகரவை உறுப்பினராயும் சின்னுட் பணியாற்றினுர் ஷா. பேரறிஞர் எனப் பெயரெடுத்தும் அவர் சிறிய பெரிய கூட்டங்களில் பங்குபெற்றுச் சமதர்மக் கொள்கைகளை வெளியிடத் தவறவில்லை.

இவரது முதல் நாடகமாகிய "விதவையின் வீடு" இங்கிலாந்தில் ஏழைமக்களின் உறையுள்களின் சொந்தக்காரர்களது அட்டூழியத்தைச் சித்தரித்ததாகும். 1885ல் எழுதப்பட்ட இது 1892ல் தான் மக்கள் மன்றத்தில் மதிப்புப் பெற்றது. இதனுடன் அன்றைய இங்கிலாந்து மக்கள் சமூக வாழ்விலுள்ள ஊழல்களை விளக்கும் மற்றுமிரு நாடகங்களைப் படைத்து. "களிப் பூட்டா நாடகங்கள்" (Unpleasant plays) வெளியிட்டார். கற்பின்மையைத் தாக்கு முகத்தான் "திருமதி வாரன்சினுடைய தொழில் (Mrs. Warren's Profession) என்ற நாடகத்தை உருவாக்கினுர். ஆனுல் அரசினர் இதற்குத் தடைவிதித்தனர். உடன் இத்தடைபற்றி ஆய எழுந்த 'பார்லிமெண்ட்' குழுவிடம் "சமூதாயத்தாழ்வுகளைக் களைய, அத்தாழ்வுகளைச் சித்தரித்தால்தான் இயலும். அவ்விதம் சித்தரிக்

கும் ஆசிரியர்களுக்குச் சட்ட உதவி இருத்தல் வேண்டும்' என வாதாடினர். இதுவே இவரை உலகறியச் செய்த ஒரு நிகழ்ச்சியாம்.

சமதர்மப்பணிபுரிய விழைந்து 'பேபியன்' சங்கத்திற் சேர்ந்த இளங்கன்னி கார்லோட் பெய்ன்–பவுன் சென்ட் என்ற அயர்லாந்து அழகியை, செல்வம்மிக்குடைக் காரிகையைக்கண்டு, காதலித்து, அது ஒரு தலைக்காதலாக மாருது, இருபாற்பட்டதாக மாறிக், கண் முதலிற் கண்டு, பிறகு கருத்துக் கவ்வியமுறையாய் மாறி, முடிவில் அக் காதற்கரு திருமண உருவாய் மாறிற்று. 1898ம் ஆண்டு ஜூன் திங்கள் முதல்நாள் பெர்னுட்ஷா இல்லறமேற்ருர். பணம் அவர்களது காதல் வாழ்வில் ஏற்றத்தாழ்வை உண்டாக்கவில்லை. பணமில்லை யெனினும் மணந்தரும் குணமுண்டு மணாளனுக்கு என்ற கொள்கை யுண்டு அவரைக் கொண்டவளுக்கு. இசையார்வம் என்ற பிணைப்பும் அவர்களது இல்லறத்தை நல்லறமாக்கிற்று. ஷாவும், மனைவியின் இசைவுபெருது தனது எந்நூலையும் வெளியிட்டதில்லை, தனக்குரிய ஒரே செல்வம் கணவர் என மங்கையர் எண்ணி, அவர் சிறிது வேறு பெண்ணை நோக்கினும் மனமருட்சி கொள்ளும் நிலையினை இவர் மனைவியார் கொண்டாரில்லை. லேடி ஆஸ்ட்ரா போன்ற பெண் களுடன் புகைப்படங்கள் எடுத்துக்கொண்ட காலையிலோ, அன்றி ஆலன்டெர்ரி என்ற புகழ்பெற்ற இளநடியுடன் நீண்ட காதற்கடிதங் களைப் பரிமாறிக்கொண்ட பொழுதோ, அன்றி ஷாவே, தன்னைப்பல இளமங்கையர் மயக்க முயற்சித்து, சிலர் வெற்றி பெற்றனர் என்று கூறிய ஞான்றே இவ்வம்மையார் மனமாறுபாடு கொண்டு பூசல் கிளப்பியதில்லை. ஷாவுக்கு மரக்கறி உணவிலே விருப்பமதிகம். ஆனல் அவர் மனைவியரோ முற்றிலும் வேறுபட்ட கருத்துக்கொண் டவர். எனினும் இருவரும் ஒரே மேஜையிலே தம் விருப்பத்திற்குரிய இருவேறு உணவுகளை மனமகிழ்வுடன் உண்பர். சுருங்கக்கூறின், ஷா இல்லறவாழ்வில் தக்க துணைகொண்டு விளங்கினர். அவரது எழுத்து வண்மைக்கு ஆக்கமளித்தது இவ்வம்மையாரின் திருப்பணி என்ருல் அஃது மிகையாகாது. எனினும் ஏனே இவ்வம்மையார் மக்களிடையே பெயர் பெறவில்லை. இவர் 1940ல் தன் இன்னுயிர்க் கணவரைப் பிரிந்து இயற்கையெய்தினர்.

ஷா நாடகங்களை எழுத எழுத அதில் முழுத்திறமை பெற்று விட்டார். 1903ல் 'மனிதனும் சிறந்தமனிதனும்' வெளியாயிற்று; 1905ல் அரங்கும் ஏறிற்று. இது ஷாவின் மதக் கருத்தை தத்துவக் கோட் பாட்டை விளக்குகிறது. அவரது தத்துவமானது: உயிர் என்பது ஆக்கல் அல்லது முளைப்பு ஆகும். அதனை உயிராற்றல்

எனக்கொளல் நலம். இவ்வுயிராற்றல் தன்னை வெளிப்படுத்தப் புது உருவங்களைப் பெறுகின்றது. உயிராற்றல் கண்ணிழந்த ஒன்றும். அது தவறுகளும் சோதனைகளும் நிறைந்த வழியினூடே செல்கிறது. குறிப்பிட்ட ஒரே வழியிற் சென்று அது தனது தன்மையை மாற்றிக் கொண்டு தன்னால் படைக்கப் பட்டவைகளை அழித்து விடுகிறது. அதன் முழுமுயற்சியும் மூளையைப் பொருத்ததேயாம். அக் கருவியின் மூலமே தனி உணர்வு, தனி அறிவு பெறப்பெறுகிறது. இன்றுள்ளது போன்று மனிதன் குறுகிய பார்வைகொண்டு, சுயநலத்துக்குழைத்து, வாழ்வின் குறிக்கோளை உணர்ந்து அதன் படிநடந்து கொள்ள இம் மூளையே ஆணைபுரிகிறது. முழுமை பெற்ற நிலையில் தன் உணர்ச்சிகளுக்கு அடிமையாகாமல், அவைகளைக் கட்டுப்படுத்தித் தன்னிலையைத் தானே சீர்செய்து கொள்ளும் பேராற்றல் பெற்றுத் திகழ்வான் மனிதன். அப்பொழுதே அவன் சிறந்த மனிதனாவான்' என்பதேயாகும் "நகரம் இன்பந்தேடிகளின் இருப்பிடம்! சொர்க்கம்" உழைத்து வாழ்வோரின் இருப்பிடம்' இதுவே ஷாவின் நகர–சொர்க்கப் படப்பிடிப்பு. இத்தகைய சிறந்த மனிதனை "சீசரும் கிளியோ பாத்திராவும்" நாடகத்தில் சித்தரிக்கிறார்ஷா. சீசரே அக் குணக்குன்றும். தான் விரும்பிய குணங்களை அவனுக்குப் புகுத்துகிறார்ஷா. ஏன் தன்னையே அப்பாத்திரம் மூலம் உலகுக்கு உணர்த்திக் கொள்கிறார் ஷா. 'செயின்ட் ஜோன்' (St. Joan) அவரைக் குன்றிலிட்ட விளக்காக்கிற்று. 'கடவுளின் அருளைப் பெற மதகுருவின் குறுக்கீடு தேவையில்லை' என்ற புராட்டஸ்டண்டு மதமூலக்கருத்தை விளக்குவதே இந் நாடகம். நாட்டைக்காக்க, நாற்படை வீரரும், மன்னரும் நடுங்கிய நேரத்திலே வெஞ்சமர் முருக்கிப் பகைவர்களை வெருட்டிய வீரப்பெண் ஜோனின் கதையே இது. ஆண்டவனின் அருளுக்கு மதகுருவின் ஆசியே தேவை என ஒப்புதலளிக்க மறுத்த காரணத்தால் பொதிகளால், செம்பஞ்சு நிறமுடைய அக்கன்னி செந்தழலால் எரிக்கப்பட்டாள். வெய்யோர்களால் வெண்ணீரான அவளது காதையை நாடகமாக்கிய ஷா, கத்தோலிக்க பாதிரிகளுக்கு உரிய மரியாதைக்கு மேல் அளித்தார். எதிரியாயினும் மரியாதைதரும் அவரது பண்பு சிறந்ததொன்றும்.

பல்லாண்டு முயற்சிக்குப்பின் "Intelligent woman's guide to capitalism and socialism" எனும் நூல்மூலம் முதலாளித்துவத்திற்கும் சோஷியலிஷத்திற்கும் விளக்கம் தந்தார். 1925ல் இலக்கிய ஆசிரியர் என்பதற்காக நோபல் பரிசு பெற்றார். பரிசுத்தொகை 7000 பவுனை முதலிற்பெற மறுத்து, பிறகு அதனை ஏற்று

இங்கிலாந்து ஸ்வீடன் இலக்கிய உறவிற்கு அதனை அர்ப்பணித்தார். அவ் வருடத்தில் ஒரு நூல்கூட வெளியிட வில்லை. இவ்விந்தையை அவர், அவருக்கே உரிய பாணியில் வேடிக்கையாகதான் நூல் வெளியிடாததால் உலகம் அடைந்த விடுதலைக்காக இப் பரிசு தரப் பட்டது" எனக் குறிப்பிட்டார். 1945ல் ஒவ்வொருவருக்குரிய தேவையான அரசியல் எவை எவை? (Everybody's political what's what?) என்ற நூலை உலகுக்களித்தார். தாம் எழுதிய நாடகங்களுக்குத் தானே மேற்பார்வை (Direction) புரிவார். தவறு செய்பவரிடம் சீற்றம்கொள்ளார். மரக்கறி உணவு உண்டு, விசித்திர ஆடை உடுத்து, மதுக்குடி வெறுத்து, புகைப்பட ஆசைக்கு அடிமைப்பட்டு, தன் உருவச்சிலையை உருவாக்க ரோடின், எப்ஸ்டன் போன்ற சிறந்த சிற்பிகளுக்கு மணிக்கணக்கில் தன்னை அர்ப் பணித்தஷா, கடைசி காலத்தில் கால் எலும்பு முறிவு நோயால் வருந்தி 1950ம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல்நாள் 10 மணி 20 மணித்துளிகால அளவில் இயற்கை யெய்தினார்.

சிரிக்கச் சிரிக்கப் பேசி, எழுத்துக்களின் மூலம் சிரித்துச் சிந்திக்க வைத்துச் சீர்திருத்தச் செயல் புரிந்த செம்மல் பெர்னட்ஷா வின் குறிக்கோள்" உயர்ந்த குறிக்கோளிற்கு இடையருது உழைப் பதில்தான் ஒருவன் உயிர் வாழ்வதன் பெருமை முழுதும் அடங்கி இருக்கிறது" என்பதேயாம். அக் குறிக்கோளினை நாம் எட்ட, நம்மை உறுப்பாகக் கொண்ட மனித இனம் எட்ட முயல்வோமாக.

"அருமை உடைத்தென்று அசவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்" —குறள்

தாமேயும் இன்புறார், தக்கார்க்கு நன்றாற்றார்,
ஏமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி
ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார்

—நாலடியார்

புத்தகம்

(சின்னமனூரான்)

அன்று மிருந்தேன் ; இன்று மிருக்கிறேன் ;
என்று மிருப்பேன் ; எங்கு மிருப்பேன் ;
கந்தலு மாவேன் ; கனகமும் கொள்வேன்
வந்தனை செய்வோர் வசமாய் விடுவேன் !
படிப்போ அறியேன் ; படிப்போர்க் குதவுவேன் ;
மிடியாம் இருட்டு விடியச் செய்வேன் ;
குருடர் படிக்க, செவிடர் அறிய
திருவாம் அறிவு தெவிட்டா தளிப்பேன் !
கல்லில் எழுந்து காலப் போக்கில்
எல்லாம் படிக்க எழிலாம் தாளில்
உருவம் பெற்றேன் ; உங்களோ டுள்ளேன் ;
உருளும் உலகம் உங்கட் கீந்தேன் !
எலும்பும் தோலும் என்றனுக் கேது ?
தோலை மட்டும் தோதாய் ஏற்பேன் !
கன்னித் தமிழ்மொழி ; கருத்துயர் ஆங்கிலம் ;
உன்னிப் பறிவு ; உத்தம ஆற்றல் ;
அனைத்தும் நானே ! அறிவீர் என்னை !
நினைத்துப் பார்மின் ! நினைத்துப் பார்மின் !
அழியாப் புகழை அவனிக் கீந்திடும்
எழிலாம் புதிராம் என்பெயர் புத்தகம் !

தமிழ் மொழி வாயிலாகக் கல்லூரிக் கல்வி

இரா. வே. சேதுராசன் பி. ஏ. (பி. டி. மாணவன்)

இன்று நம் நாட்டில் நடைமுறை யிலிருக்கும் கல்வி முறை ஆங்கிலேயர்களால் 1833ம் ஆண்டு மெகாலே என்பவரால்—தங்களுடைய ஆட்சியை ஒழுங்காக நடத்துவதற்குறியவர்களை உண்டு பண்ணும் எண்ணத்துடன் புகுத்தப்பட்டது. ஆங்கிலேயர்கள் வெளியேறியும் இன்னும் அவர்களுடைய அடிச்சுவடுகள் மறையவில்லை. சுதந்திரமான கொள்கையைப் பின்பற்றி வரும் நம் நாட்டுக்குத் தற்போதுள்ள கல்விமுறை சரியானதன்று. உண்மையான குடிமக்களைப் படைக்கும் கல்வி முறை வேண்டும்.

தமிழ்மொழி வாயிலாகக் கல்லூரிகளில் கல்வி போதிக்க முடியுமா என்பது பற்றி ஆராயுமுன் தமிழ் மொழி மூலம் கற்பிக்கப் படுவதால் ஏற்படும் இன்னல்கள் யாவை, மாணவர்களின் நிலை என்ன, தமிழ் மொழி வாயிலாகக் கல்லூரிகளில் கற்பித்தால் ஏற்படும் நன்மைகள் என்ன என்பது பற்றி ஆராய்வோம்.

உயர்நிலைப் பள்ளிகளில் இறுதியாண்டு வகுப்பு வரை எல்லாப் பாடங்களையும் தமிழில் கற்றுவிடடுக் கல்லூரிக்கு வந்தவுடன் எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் பயிலச் சொல்வது கண்ணைக் கட்டி காட்டில் விட்டதை யொக்கும். கல்லூரி ஆசிரியர் பாடங்களைக் கற்பிக்கும் போது நம் மாணவர்கள் பேந்தப் பேந்த விழிப்பதைத் தவிர வேறு என்ன பார்க்கின்றோம்? கற்பிக்கும் ஆசிரியரும் மாணவர்களும் ஒரே மொழியைத்—தமிழைத்—தாய்மொழியாகக் கொண்டவர்கள். ஆசிரியர் அம் மாணவர்களுக்குக் கற்பிக்க ஆங்கிலத்தைக் கருவியாகக் கொள்கிறார். இதைவிடக் கேலிக்கூத்து இருக்க முடியுமா என்று கவிஞர் தாகூர் கேட்டார். கணவனும் மனைவியும் படுக்கையறையில் உரையாடுவதற்கு வக்கீல் வைத்துக் கொள்வது போன்றதல்லவா? என்று குத்தலாகக் கேட்டார். மாணவர்களுக்குத் தாய்மொழியில் தான் கற்பிக்க வேண்டும் என்று அண்ணல் காந்தியடிகள் கூறினார்கள். காங்கிரஸ் ஆதரவுடன் காசியில் 'வித்தியா பீடம்' ஆரம்பித்த பொழுது அங்கு ஹிந்தியிலேயே வகுப்புகளை நடத்தினார்கள். இன்னும் அம்மொழியே பயிற்சிமொழியாக இருந்து வருகின்றது.

ஆங்கிலத்தில் கல்வி கற்பிக்கப்படுவதால் நம் மாணவர்கள் அடையும் இன்னல்கள் கொஞ்சமல்ல. முதலாவதாக, ஆசிரியர்

பேசுவது மாணவர்களுக்குப் புரியாது. மேலும் மாணவர்கள் மனப் பாடம் செய்வதைத் த்விர வேறு வழியில்லை. மணப்பாடம் செய் வதால் சொந்தமாக எழுதும் திறனும், சிந்திக்கும் திறனும், பேசும் திறனும் போய்விடுகிறது. மாணவர்களின் தரம் குறைவதற்கும் இதுவே காரணம். மாணவமாணவிகள் பலங்குன்றி யிருப்பதற்கும் இதுவே காரணம் எண்பது எல்லோரும் அறிந்ததே. இந்த இன்னல்களைப் போக்கவேண்டுமானுல், ஒன்று ஆங்கிலத்தை முதல் வகுப்பு முதல் கல்லூரிப், பட்டப்படிப்பு முடியும்வரை கற்பிக்கும் மொழியாக்கவேண்டும் அல்லது தமிழ்மொழியை ஆரம்பப் பள்ளி யிலிருந்து கல்லூரி இறுதி வகுப்பு வரை கற்பிக்கும் மொழியாக்க வேண்டும். இவ்விரண்டில் முன்னையது முடியாத தொன்று. இரண்டாவது தான் செய்யக் கூடியதும், செய்தால் நன்மை பயக்கக் கூடியதுமாகும். தமிழ்மொழி வாயிலாகக் கல்லூரிகளில் கல்வி கற்பித்தால் மாணவர்கள் எளிதில் புரிந்து கொண்டு கற்கும் வாய்ப்பும் ஏற்படும். கல்வியின் தரமும் குறையாது.

இனித் தமிழ் மொழியின் மூலம் கல்லூரிகளில் கல்வி கற்பிக்க முடியுமா என்பது பற்றி ஆராய்வோம். இதுவரை தமிழ் மொழி வாயிலாகக் கல்லூரிகளில் கல்வி கற்பிக்கப் படாததற்குக் காரணங்கள் யாவை? ஆங்கில மோகத்தால் கட்டுண்டு கிடக்கும் அறிஞர்கள், தமிழ் மொழியின் வாயிலாகக் கல்லூரிகளில் கல்வி கற்பிக்க முடியாது, தமிழ் மொழியில் போதிய நூல்கள் கிடையாது, விஞ்ஞானம், தொழில் நுணுக்க அறிவு முதலியவைகளைத் தமிழ் மொழியின் வாயிலாகக் கற்பிக்க முடியாது, இப்பொழுதுள்ள ஆசிரியர்களை வைத்துக் கொண்டு நடத்த முடியாது என்றெல்லாம் கூறிவிடு வார்கள். இந்தக் கூற்றில் எவ்வளவு உண்மை இருக்கிறது என் பதைப் பார்ப்போம். தமிழ் மொழியில் கற்பிக்க முடியுமா முடியாதா என்பதற்கு ஒவ்வொரு பாடமாக எடுத்துக் கொண்டு பார்ப்போம். முதலாவதாக வரலாற்றை எடுத்துக் கொள்வோம். திரு. சதாசிவப் பண்டாரத்தார் எழுதியுள்ள ‘சோழபுரம்’ என்றும் நூலைப் படித்தால் மூளையில் ஏருதா? பண்டத நேருவின் உலக சரித்திரத்தைத் (Glimpses of World History) திரு. அளகேசன் தமிழில் மொழி பெயர்த்திருக்கிருர், இது முடிந்திருக்கும்போது வரலாற்று நூலை ஏன் தமிழில் எழுதமுடியாது? கிரேக்கப் போர்களைப் பற்றித் திரு. வெ. நா. சாமிநாத சர்மா எழுதியிருப்பது நமக்குப் புரிய வில்லையா? இனிப் பொருளாதாரத்தை எடுத்துக்கொள்வோம். பொருளாதாரத்தின் நுணுக்கங்களைப் பற்றித் தமிழில் நூல்கள் வெளிவரவில்லையா ? திரு. எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள்

எழுதிய 'மார்க்ஸீயப் பொருளாதாரம்' விளங்காத தொன்று? திரு. கே. சந்தானம் என்பவர் 'செல்வம்' 'என்னும் நூலை எழுதியிருக்கிறார். அடுத்துத் தத்துவநூலை எடுத்துக் கொள்வோம். சாணக்கியரின் சரித்திரத்தைத் திரு. பண்டித மணி கதிரேசன் செட்டியார் மொழிபெயர்த்திருக்கின்றார். பிளேட்டோவின் 'குடியரசைத்' திரு. வெ. நா. சாமிநாத சர்மா மொழி பெயர்த்திருக்கின்றார். இவைகள் தவிர நம் தமிழ்மொழியில் தத்துவ, அரசியல் நூல்கள் இல்லையா? ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய மணி மேகலையில் இந்திய நாட்டுத் தத்துவங்களனைத்தையும் பற்றிச் சீத்தலைச் சாத்தனார் எழுத வில்லையா? வள்ளுவர் அரசியல், தத்துவ உண்மைகளை எடுத்துச் சொல்ல வில்லையா? சைவ, வைணவ, புத்த, ஜைன, மார்க்ஸீய சித்தாந்தங்கள் பற்றித் தமிழில் நூல்கள் இல்லையா? ஹெகல் (Hegel), காண்ட் போன்றவர்களின் தத்துவங்கள் தமிழ் மொழியில் அடங்க மறுக்குமா?

அடுத்துப் பாடப் புத்ததகங்கள் தமிழில் இல்லை என்ற கூற்றை எடுத்துக் கொள்வோம். தமிழில் பாடம் நடத்தாத போது தமிழில் பாடப் புத்தகங்கள் எங்ஙனம் வெளிவரும்? தமிழில் பாடப் புத்தகங்கள் வெளியிடப் பல்கலைக் கழகம் எவரை அணுகியது? சர்க்கார் இதற்காகச் செய்தது என்ன? உயர் நிலைப் பள்ளிகளில் தமிழ் மொழியில் கற்பிக்கக் கூடாது என்று 1938ல் கூறிய போது பாடப் புத்தகங்கள் தமிழில் இல்லை என்ற காரணத்தையும் கூறினார்கள். ஆனால் தமிழ் போதனா மொழியாக்கப்பட்டால் பாடப்புத்தகங்கள் தானாகவே வெளிவரும் என்று திரு. இராசகோபாலச்சாரி அவர்கள் அன்று கூறினார்கள். அதன் படியே நடந்தது. இந்தப் பெரியோர்களின் சொற்கேட்டிருந்தால் இன்றும் ஆங்கிலம் தான் உயர் நிலைப் பள்ளிகளிலும் ஆட்சிபுரியும் அவல நிலை ஏற்பட்டிருக்கும்.

இனி, விஞ்ஞான நூல்களைத் தமிழில் எழுத முடியாது என்று கூறுபவர்களின் வாதத்தை எடுத்துக் கொள்வோம். இதுவும் உண்மை யல்ல. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே, கல்லூரி வகுப்புகளுக்கென்றே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய திரு. அனந்த வைத்திய நாதன் என்பவர், தமிழில் இராசாயன நூல் ஒன்று எழுதினார். பேராசிரியர்களான திருவாளர்கள் மாணிக்கம், பொ. நா. அப்புசாமி, ஆர். கே. விசுவநாதன் முதலியோர் பௌதிக சம்பந்தமான நூல்களை எழுதியுள்ளார்கள். கலைக்கதிர் மாத சஞ்சிகையில் விஞ்ஞானப் பாடம் தமிழில் எழுதப் பெற்று மாதா மாதம் வெளிவருவது நாமெல்லோரும் அறிந்ததே. எவ்வகைக் கருத்துக்களையும் தமிழில் எழுதமுடியும் என்பதற்குக் "கலைக்களஞ்சியம்"

நல்லதோர் எடுத்துக் காட்டு. நுண்மையான கருத்துக்களையும் கலைச் சொற்களைக் கொண்டு எழுதமுடியு மென்பதை அவைகள் நிரூபித்து விட்டன.

கல்லூரியில் ஆசிரியர்கள் ஆங்கிலத்தில் விஞ்ஞானத்தைக் கற்றுக்கொடுக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் சோதனைக் கூட்டத்தில் மாணவர்கள் தமிழில் வினவுவதைப் பார்த்திருக் கின்றேன். நானும் இடைநிலை வகுப்பில் புகுந்த காலை கேட்டிருக் கின்றேன். காரணம் ஆங்கிலத்தில் கற்பிக்கும் போது விளங்காதது தான். சோதனையின் நோக்கம் சரிவரத் தெரியாமல் மாணவன் எப்படிப் பரிசோதனை செய்வது? அதனால் ஆசிரியர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தமிழில் கற்றுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. கருத்துக்காக மொழியா, மொழிக்காக கருத்தா? என்பது தான் நம் முன் எழுந்துள்ள கேள்வி. மொழி என்பது ஒரு கருவி. ஆங்கில வெறியர்கள் குறிக்கோளை மறந்து விட்டுக் கருவியைப் பற்றிப் பேசுகிறார்கள்.

தமிழ் மொழியில் கல்லூரிகளில் கல்வி கற்பித்தல் சாத்தியமா என்ற வினவுக்குப் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பே நாம் பதில் கொடுத்து விட்டோம். உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கும் மொழியான போதே தீர்ப்புக் கூறியாகிவிட்டது. கல்லூரிகளிலும் தமிழே பாடமொழியாகும் என்று எதிர்பார்த்தே அந் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனால் அப்பொழுது பல அறிஞர்கள் தமிழில் கல்லூரி வகுப்புகளுக்கான நூல்களை எழுத ஆரம்பித்தார்கள். இரண் டாம் உலகப் போர் இந்த நேரத்தில் ஆரம்பமாயிற்று. ஆங்கில–இந்திய முரண்பாடு தீவிரமடைந்தது. கல்வி மாற்றம் பற்றிய கருத்தும் தள்ளிவைக்கப்பட்டது.

உயர்நிலைப் பள்ளிகளில் தமிழும், கல்லூரிகளில் ஆங்கிலமும் பாடமொழியாக விருக்கும் இன்றைய நிலை இரண்டுங் கெட்டான் நிலையாகும். பாதிக் கிணறு தாண்டும் புத்திசாலித்தனமாகும். இன்றையக் கல்வி நெருக்கடிக்கு இது ஒரு காரணமாகும்.

இனித் தமிழ் மொழி கல்லூரிகளில் பாடமொழியாவதற்குச் செய்ய வேண்டிய தென்ன என்பதை ஆராய்வோம். பாடப்புத்த கங்கள் தமிழில் வெளிவர பல்கலைக் கழகமும் அரசாங்கமும் ஏற்பாடு செய்ய வேண்டும். பாடப்புத்தகங்களும் அவை சம்பந்தப்பட்ட பொது அறிவு நூல்களும் தமிழில் வெளியாகும் வரை, ஆங்கிலத் திலுள்ள நூல்களைத் துணை நூல்களாகக் கொண்டு தமிழிலேயே பாடங்களைக் கற்பிக்க வேண்டு மென்றும் தமிழிலேயே தேர்வுகள்

நடத்தப்பட வேண்டுமென்றும் முடிவு செய்ய வேண்டும். எந்த மாறுதலிலும் இன்னல்கள் இருப்பது இயல்பே. ஆசிரியர்களில் சிலருக்கு வேண்டு மென்றால் தமிழ் சரியாக வராமலிருக்கலாம். அவர்களும் சிறிய துணைகொண்டு முயற்சி செய்தால் இந்த இன்னல்களை விரைவில் நீக்கிவிடலாம். அந்த ஒரு சிலரின் துன்பத்திற்காகத் தமிழைச் சிறைப்படுத்திக் கொலை செய்யக் கூடாது.

சோவியத் நாட்டில் புரட்சி 1917ல் முடிந்த பொழுது மத்திய ஆசியாவில் வாழும் உஸ்பெக் மக்களின் மொழியோ அல்லது டாஜிக் மக்களின் மொழியோ வளம் அடைந்திருக்கவில்லை. அந்த மொழிகளின் பிற்பட்ட நிலையை முன்னிட்டு சோவியத் அரசாங்கம் ருஷிய மொழியைத் திணித்தது, நம்மீது இந்தி மொழி மத்திய அரசாங்கத்தால் திணிக்கப்படுவது போல் இல்லை. அந்தந்தக் குடியரசில் அந்தப் பிராந்திய மொழியே போதனா மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் இருக்கிறது. அந்த நாடுகளில் நூற்றுக்கணக்கில் வைத்திய நிபுணர்களும், பொறிவல்லுணர்களும் தாய்மொழியில் படித்தே தேர்ச்சி பெற்றுத் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் சீனாவிலும் இதே நிலைமைதான் ஏற்பட்டது. சீனப் புரட்சி வெற்றியடைந்த உடன், சீன அரசாங்கம் சீனமொழியையே போதனா மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஆக்கினார்கள். அவர்கள் ஆங்கிலத்தையோ அல்லது ருஷ்ய மொழியையோ ஆட்சி மொழியாக்க வில்லை.

'யாதும் ஊரே யாவரும் கேளிர், என்று கூறிய கணியன் பூங்குன்றன் மரபில் வந்த நாம் ஆங்கிலத்தையோ அல்லது வேறு மொழியையோ வெறுக்கவில்லை. எல்லா மொழிகளும் வளர்தற்கு உரிமையுண்டு. விருப்பமுள்ளவர்கள் எம்மொழியையும் கற்கலாம். விற்பன்னர்களாகலாம். அந்நிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழைச் செழுமைப்படுத்தலாம். ஆனால் ஆங்கிலம் மூலமாகத்தான் எல்லாவற்றையும் பயில முடியும், பயில வேண்டும் என்று கூறினால் நாம் ஏற்கத் தயாராகயில்லை. சுதந்திரமாக, சுயேச்சையாக, நாம் பல துறைகளிலும் முன்னேற வேண்டுமானால் தமிழ்மொழி கல்லூரிகளில் போதனாமொழியாக்கப் படவேண்டும். இது அவசரமும் அவசியமும் ஆகும். அதுவே இயன்ற காரியமும் கூட. வேறு மொழிகளைக் கற்றுக்கொள்ள விரும்புவர்களுக்கு ஏற்ப அவைகளைத் தனிப்பாடமாய் எடுத்துப் படிக்க வாய்ப்பும் வசதியும் செய்து கொடுத்தால் அவைகளை விரும்புவோர்களும் கற்க முடியும்.

வள்ளுவரும் மகளிரும்

இ. சாவித்திரி, பி. ஏ. (பி. டி., மாணவி)

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வள்ளுவர், வானை அளந்தார், வானத்து மீனை அளந்தார் என்றெல்லாம் கூறுவது பொருந்தாது. சுருங்கக்கூறின் அன்று அவர் மக்கள் வாழ்ந்த வாழ்க்கையை அளந்தார். வாழும் வகையை, வாழ்க்கை நெறியை வையத்தார் உணர உரைத்தார். ஒன்றே முக்கால் அடியில் உலகம் என்ன என்பதை அறிவித்தார். உலகுய்ய உயர் குண மகளிரின் சேவை இன்றியமையாதது என்பதை உணர்ந்த வள்ளுவர், மகளிர் பற்றிப் பல மாண்புறு கருத்துக்களைக் கூறியுள்ளார். சிலவற்றைக் காண்போம்.

தமிழ் நாட்டுப் புலவர்களிலே எந்தப் புலவரும் வள்ளுவரைப் போன்று பெண்மையினைப் போற்றியது இல்லை. பெண் நடத்துகின்ற இல் வாழ்க்கைக்கு வள்ளுவம் சிறந்ததோர் வழி காட்டியாக அன்றும் இன்றும் விளங்குகிறது. வாழ்க்கை நெறிகளை யெல்லாம் வகுத்துக் காட்டுகின்றார் வள்ளுவப் பெருந்தகை. அன்பின் அடிப்படையிலே பிறக்கின்ற அறவழிகளை யெல்லாம் நாம் குறளிலே காணுகிறோம்.

"பெண்களுக்கு உடல் வலியும் இல்லை. மன வலியும் இல்லை. அவர்களது கற்பினைக் காக்க வேண்டுமானால், வீட்டில் பூட்டி வைத்தல் வேண்டும். பெண்கள், தம் மயக்கில் சிக்கியவரை அற வழியில் செலுத்துவதில்லை. அவர்களோடு கூடி வாழும் இல்லறம் நல்லறமன்று, மனவலி அற்ற அவர்கள் ஆடவர் சொற்படி நடப்பதே அவர்களுக்கும், உலகிற்கும் நன்மை பயக்கும். பெண்கள் தாழ்ந்தவர்கள். இவர்கள் உயர் நிலை அடைவதென்பது முடவன் கொம்புத் தேனை அடைவது போலாகும். பெண்பிறவியிலும் இழிவான பிறவி வேறொன்றுமில்லை," என்று நிலவி வந்த பழங்காலக் கருத்துக்களுக்குத் துணிந்து முதன் முதல் சாவு மணி அடித்தவர் வள்ளுவப் பெருந்தகையே.

பெண்களும் கல்வி கற்று, கவினுற விளங்க வேண்டும் என்ற கருத்தை மனதிலே கொண்டு தான் வள்ளுவர், ஆண் என்றும், பெண் என்றும் பாராது, பொதுப் படையாக கல்வி இல்லாதவரை விலங்கோடும் இறந்தாரோடும் வைத்து எண்ணுகின்றார். "விலங்கொடு மக்களனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்".

பெண்கள் சிறந்த மனத்திட்பம் உடையவர்கள். மனத்திட்பமே மாண்பினைக் கொடுக்கும் என்ற கருத்தைவள்ளுவர்,

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள க்ற்பெண்ணும்
திண்மை உண்டாகப் பெறின்''

எனப் புகழ்ந்துரைக்கின்ருர். திண்மை என்பது கலங்கா நிலே என்று பொருள்படும். பெண்கள் பிறருக்காக வாழும் பெற்றியாளார்; பெரும் புலவர்கள்; பேரருள் படைத்தவர்கள். இந்தக் கருத்துக்களே யெல்லாம் மனதில் கொண்ட வள்ளுவர் பெண்ணின் இலக்கணம் கூறுகின்ற இடத்து,

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.''

என்று கூறுகின்ருர். பெண்களிடம் அமைய வேண்டிய பண்பு மனத் திட்பம் என்பதை பின் வரும் குறளில் நன்கு வலியுறுத்துகின்ருர்.

சிறை காக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பேதலே''.

பகுத்துண்டு வாழ்தலே பைந்தமிழ் நாட்டுப் பேரறமாகும். இப்பேரறத்தினே, அன்பு நெறியின் வளர்க்கின்ற பெருமை பெண் களுக்கே உரியது. அதுவும் சிறப்பாக இல்லறத் தோரது பேரறம் இதுவேயாகும். இவ்வறத்தினே செய்து வருதலே இல்லறத்தோரது கடமையாகும் என்பதை''

''இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு''

என்று சொல்லுகிருர். பெண்களோடு நடத்தும் இல்லறமே இயற்கை அறம், நல்லறம் என்பது வள்ளுவரது முடிபாகும். எனவே வள்ளுவர் "அற னெனப்பட்டதே இல் வாழ்க்கை," என்று கூறுகிருர்.

வள்ளுவர் ஒரு சிலரைப் போல் பெண்களேப் பேயெனப் பேசவில்லே. செயற்கைத் துறவினேயே பேய்த் துறவாக்கிக் கண் டிக்கிருர். இன்பத்துப் பாலில் வள்ளுவர் அன்பு வழியாக ஒருவரை ஒருவர் மணக்கும் உரிமையை வற்புறுத்துகின்ருர். அன்பிலாரது கூட்டம், பிணத்தைத் தழுவுதலே ஒக்கும் என்று வற்புறுத்திக்கூறு கின்ருர். தலேவனுக்கும், தலேவிக்கும் இடையே காணுகின்ற அன்பு நிறைவை,

"எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து''

என்று தலேவி கூறுவதாக உள்ள பாடலும்,

"உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு"

என்று தலைவன் கூறுவதாக உள்ள பாடலும் நன்கு விளக்குகின்றன.

ஒத்த பேரன்பு பூண்டொழுகுகின்ற தலைவனும், தலைவியும் ஒருங்கு இருக்கின்றகால் தலைவன் தும்முகின்றான். தலைவி, இவன் மேல் அன்புகொண்ட பிறிதொருபெண் இவனை நினைத்தலால் விளைந்ததாகும் என்று தவறாக மனதிலே கொண்டு தலைவன்மீது ஐயுற்று ஊடி நிற்கின்றாள். மேலும் தலைவனுக்குத் தும்மல் வருகின்றது. தும்மலிலும் தலைவி குற்றங்காண்பதை எண்ணி அதனை அடக்க முயல்கின்றான். இதைக் கண்ணுற்ற தலைவி "உம்மோடு உயிராகி, ஒன்றாகி பெண்கள் உம்மை நினைப்பதனை, நும்மோடு இயைபில்லாத எமக்கேன் மறைக்கின்றீர்? நன்றாகத் தும்முவதுதானே." என்று தளர்ந்து அழுவதாய் "தும்முச் செறுப்ப அழுதாள், நுமர் உள்ள வெம்மை மறைத்தீரோ என்று"என்று படிப்போர் பரவசமுறும் வகையில் கூறுகின்றார், இத்தகைய அன்பு வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை, சீரிய வாழ்க்கை. தமிழர் தம் இன்ப வாழ்க்கை ஆகும்.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்ற குறளில் உலகின் நன்மைக் கென பிள்ளை பெறும் அறிவிற் சிறந்த தமிழ்த் தாயைப் புனைந்துரைக்கின்றார். அறத்தில், பொருளை யெல்லாம் பெண்ணிடம் கொடுத்து விடுகிறார். ஆடவன் அங்கு துணையாகிப் பின் நிற்க அவளே இல்லறத்தைத் திறம்பட நடத்தி அவனையும் நல்வழிப் படுத்துவதைக் காட்டுகிறார். அன்பு பூண்டொழுகி, அறமும் பொருளும் கருதி, அவளது உயிர்ப் பண்புகளை உலகு இன்பமுறப் பொலியச் செய்து, அவளது பெண் மையையும் உணர்ந்துய்த்து, அவருடன் இணைந்து வாழ்வதையே, அறம் என்றும், இன்பம் என்றும் புகழ்கின்றார். அறத்திலும், பொருளிலும், இன்பத்திலும் வாழ்க்கைத் துணையாவாள் பெண் ணென்பது வள்ளுவரது துணிந்த முடிவாகும். பெண்ணிற் பெருந் தக்க யாவுள", என்பதே திருவள்ளுவர் காணுகின்ற உண்மை.

வாழ்க பெண்ணினமை! வளர்க அறம்!

"அகரமுதலெழுத்தெல்லாம்..."

திரு. சுவாமிநாதன், பி. ஏ., (பி. டி. மாணவன்)

"அ. ஆ"— இருவரும் உயிர் நண்பர்கள். அ. வருகிறான்.

அ: அவையில் அமர்ந்திருக்கும் அறிஞர் பெருமக்களே! நான்தான் திருவாளர் "அ". என்னைப்பற்றி எல்லோரும் அறிந்திருப்பீர்கள். உயிர் எழுத்துக்களையே ஆரம்பித்த முதல்வன் யான். (தனக்குள்) "அதோ வருகிறார் நண்பர் திருமிகு" "ஆ" வணக்கம் நண்பரே!

ஆ: வணக்கம்! நலம் தங்கள் நலமறிய நாட்டம்.

அ: நன்றி நலம் நாடியமைக்கு. அவையோர் அனைவரும் என்னைப் பற்றியே இத்தனை நேரமும் பேசுகின்றனர். "நானே முதல்வன். அகரமின்றி ஆகாரமேது" என்று அறைகின்றனர். 'அ'வை அடுத்து நிற்பது "ஆ" என்றுங் கூறுகின்றனர். 'அ'வின் நெடில்தான் 'ஆ' என நான் நினைக்கின்றேன்.

ஆ: 'ஆ'வின் குறில் 'அ' அல்ல. அதன் பால் என்பது ஞாபகமிருக்கட்டும் நண்பரே! உம்மைப்பற்றி நீரே பெருமிதங்கொள்ளுகின்றீர் போலும்! ஆங்காங்கு வீற்றிருக்கும் ஆன்றோர் 'ஆ'வின் ஆர்வத்தைப் பற்றியும் ஆலோசனைத் திறனைப் பற்றியும் ஆய்ந்திலர் போலும். அட்டகாசம் வேண்டாம் நண்பரே! அதிருப்தி உண்டாக்காதீர்கள் அனுவசியமான வார்த்தைகளால் அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள். "ஆ" ஆரம்பித்ததே ஆண்டவன் என்பதும் நினைவிருக்கட்டும், ஆத்திரத்தால் கூறவில்லை; ஆலோசனையின் பேரில் கூறுகிறேன்.

அ: ஆணவம் வேண்டாம் நண்பரே! அமைதிகொள்ளும்! அவையோர் கூற்றினைக் கூறினேன் அன்புமிகுதியால். அதனை ஆத்திரக் கண்ணோடு கண்டு அவதிப்படுகிறீர்! நீரே உம் பெருமை பேசமுற்பட்டீர்! நன்று! நீரே ஆண்டவனை ஆரம்பித்தீர்! அவ்வாண்டவன் இருப்பது அவனி; அகிலம். அன்புடையோர் (நெஞ்சு) அகம் என்பதனை யெல்லாம் மறந்தீர் போலும். தற்புகழ்ச்சியிலேயே இகழ்ச்சியடைந்தீர். அருள் மிகுதியால், அன்பு மொழியிற் கூறுகிறேன். "ஆ" எனக்கூறி ஆவேசப்பட வேண்டாம்! அவையோர் இகழ்வர். அட்டகாசம், அதிருப்தி, என்று ஆலோசனையின்றி ஆட்டம் வேண்டாம். ஆட்டம் ஓட்டங்கொள்ளும். மறுமுறையும் கூறுகிறேன்.

"அன்பின் சிறப்பே ஆன்ற பிறப்பு"

ஆ: ஆராய்ச்சியற்றது ; ஆணவமிகுந்தது ; ஆட்டம் வேண்டாம், ஆர்ப்பரித்தது போதும் என்று கூறிவிட்டு நீயே "அ" வின் பெருமைப் பற்றிப் பேரம் பேசுகிறீர். நன்று. "அ" வே எல்லாச் சிறப்புக்களும் பெற்றதாக இருக்கட்டும். ஆனுல் அயலான் சிறப்பிலே அசுத்தம் உண்டாக்காதீர்! 'அ' வின் பெருமை பற்றியே பேசுங்கள். நானும் அவமரியாதையின்றி, அவநம்பிக்கையின்றி, அழுமுகம் போக்கி ஆனந்தம் அடைகின்றேன், ஆகா என்று கூறி ஆமோதிக்கிறேன். ஆதவனே ஆண்டவன் என்றும், ஆலயத்திலேதான் ஆண்டவன் உளன் என்றும், ஆண்டவன் ஆழமிக்க அன்புடையோர் நெஞ்சிலே தான் ஆடல் செய்வான், ஆட்சி செய்வான் என்றும் அவனி வாழ் அறிஞர்பலர் கூறுவது தாங்கள் அறிய வில்லே போலும்! அன்பிருந்தால் மட்டும் போதாது; ஆசாரம், ஆய்ந்தறியும் திறன் தேவை! ஆம் என்று ஒத்துக் கொள்வீரா? அல்லது தற்புகழ்ச்சிப் பாராயணம் செய்வீரா? அல்லது வசை புராணம் இசையோடு பாடுவதில் அனுபவ முடையேன் எனக் காட்டுவீரா?

அ: அன்பில் நண்பரே! ஆகாது என்று தெரிந்தே ஆத்திரம் தீர அரையப் போகின்றேன். என்னே இகழாதே உன்னேயே புகழ்ந்து கொள் மகிழ்கிறேன் என்று கூறிவிட்டு ஆட்டம் போடுகிருய் அதுவும் போதாதென்று அன்புமிகு அவனியரசனே யும், அணேயாக் கதிரவனேயும், அழகுமிக்க அகங்களேயும் மேற் கோளாக எடுத்துக் கூறுகிருயே, ஏன்? என்புகழ்பாட எனக் குத் தெரியாது என்ற எண்ணமா? அவனி சுழல்வது அன்பால். ஆணவத்தால் அல்ல! அகிலம் இயங்குவது அருளால்; ஆத் திரத்தால் அல்ல! பழக்கம் தோன்றுவது அறிவால் – அழகால்; ஆளால் அல்ல! உலகம் செழிப்பது அருளால்! அன்பால்!! அன்பின் திறனல்!!! அறத்தால்!!! நீ பேசக் கற்றுக் கொண் டதே அறிவால்!

ஆ: அறிவு மட்டும் படைத்தவன் மனிதனல்ல! மக்களல்ல! மக்களினம்! ஆறறிவு படைத்தவன்தான் மனிதன். பேசக் கற்றுக் கொண்டது அறிவால் அல்ல, ஆகையால் ஆர்வத்தால். "ஆ"கையால் திருத்தப்பட்டீர்! ஆக்கம் அதர்வினுய்ச் செல் லும் என்ற ஆன்ருேர் வாக்கை மறந்தீர்போலும். ஆதலால் கூறுகிறேன், அழுக்காறு அவா, அச்சுறுத்தல் எல்லாம் அடாத குணங்கள்! அடாது செய்தால் படாதுபட நேரிடும். நினேவு இருக்கட்டும்!

அ : ஆக்கம் அதர் வினுய்ச் செல்லும் என்று கூறிய அறிஞர் "அறத்தி னூங்காக்கமு மில்லை" என்று அறுதியிட்டுக் கூறியது தங்கட்குத் தெரியாது போலும்! ஏன்? அவனிக்கே அறநூல் அளித்துச் சென்ற வள்ளுவப் பெருந்தகையின் திருக் குறளை எடுத்துக் கொள்ளேன்! முதலிடம் அகரத்திற்கு! பின்புதானே 'ஆ'காரம் (ஆதி)

ஆ : ஆதியோடந்தமாய்க் கூறிவிட்டீரே. அணங்கு என்று கூறு வதை வெறுத்துத் தானே, ஆயிழை, ஆரணங்கு, ஆய்தொடி என்றெல்லாம் ஆணித்தரமாகக், கூறியுள்ளனர் கூர்மதிபடைத் தோர். ஆற்றுவாராற்றல் பசியாற்றல். ஆடையில்லா மனிதன் அரை மனிதன்! ஆர்வமில்லாதவன் அக்கரை யற்றவன்! ஆலோசனை யில்லாதவன் அடிமுட்டாள்! ஆடாதமயில், ஆழ மில்லாத ஆழி, ஆக்கமில்லா நாடு, ஆளத்தெரியாத அரசன், ஆலயமில்லா ஊர்; ஆறு இல்லா நகர்; ஆண்மையற்ற வீரன்; ஆடலறியா அழகி; ஆசாரமில்லாத மனிதன்; ஆதாயமில்லாத வியாபாரி என்றேனும் பெருமை கொள்ள முடியுமா அன்பரே! உமக்கும் நமக்கும் வேற்றுமை விண்மீன் எண்ணிக்கை போன் றது! 'ஆ'காயம் உயர்ந்தது எனநினைவூட்ட ஆசைப்படு கிறேன்.

அ : எமக்கும் உமக்கும் 'சுழி'தான் வித்தியாசம். உன் சுழியால் நீர் அழியாதீர்! "அடுக்கிய கோடிபெறினும் குடிப்பிறந்தார் குன்றுவ செய்தலிலர்" அறையில் ஆடித்தானே அம்பலத்தில் ஆடவேண்டும். அலர் இல்லாத மலர்; அன்பில்லா வாழ்வு; அழகில்லா ஆயிழை; அரசனில்லா ஆட்சி; அறிவில்லாத மனிதன்; அம்பில்லாத வில்' அடக்கமற்ற நடத்தை என்றேனும் அவனியில் பெருமை பெற முடியுமா? உலகு உய்யவழி காண் கிறது அது எது? அகில உலகக் கழகம். பெற்ற பிள்ளையைப் பேணிவளர்ப்பவர் யார்? அம்மா, அப்பா! அவர்களுக்குப் பின், அண்ணி அண்ணு!

ஆ : பெற்ற பிள்ளையைப் பேணிவளர்ப்பவர் அப்பா அம்மா! தான் யார் மறுத்தது? ஆனுல் அவர்களை அடித்துத் திருத்தி ஆய்வாளராக — அறிஞுக ஆக்குவது ஆசிரியர் குழாமன்றோ! அவனி அழிய அணு குண்டு வாழவேண்டுமா? அணு குண்டு தான் அன்பின் இருப்பிடமா? அவனியின் முதல் மனிதனே ஆதாம்! அழகுக்குப் பெயர் பெற்றது ஆலயம்! அடுத்தது காட்டுவது ஆடி! ஆமோதித்துத்தானே ஆகவேண்டும்.

அ: ஆத்திரம் வேண்டாம்! அமைதியோடிரு! ஆகாதது பற்றிக் கூறி ஆயாசமடையாதீர்! அதிர்ஷ்டமுள்ளோனுக்குக் கஷ்ட மேது! அன்புடையோனுக்கு ஆத்திரமேது? அதோ நண்பர் "இ" வருகிறார்! அவரையே கேட்போம். அடுக்கும் நெறி யெது அடுக்கா நெறியெது? அறிந்து சொல்லும் நண்பரே!

ஆ: ஆகும் நெறியெது ஆகா நெறியெது? ஆய்ந்து கூறும். இன் கவி பாடும் வன் கவி வாணரே!

இ: ("இ .... ஈ ....! என நகைத்துக் கொண்டே வருகிறான்!)

நீவிர் இருவரும் இது நேரம் வரை யாது பேசிக் கொண் டிருந்தீர்களென எனக்குத் தெரியும். ஏன் நமக்குள்ளே இத்தனைப் போராட்டம்? எவன் உயர்ந்தவன்? எவன் தாழ்ந் தவன்? எவன் பெரியவன்? எவன் சிறியவன்? எல்லோரும் நல்லவர்! 'அ, அரசோச்சுந்திறன் பெற்றிருக்கலாம் அல்லது 'அ' சிங்கமாயிருக்கலாம்' 'ஆ' ஆளுந்திறம் பெற்றிருக்கலாம். அல்லது "ஆ" பாசமாகவிருக்கலாம்! "இ" இவர்களை யெல்லாம் விஞ்சியிருக்கலாம். 'இதுவா இன்றைய பிரச்சினை? என் நாடு பொன்னாடு இயற்கை யன்னையின் எழில் பெறுநாடு! இற்றை உலகின் அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் பாடு படும் நாடு! அன்பு, அகிம்சை எனும் உயிர்நெறி பிறழா நாடு! இல்லாமை நீக்கி இயற்கை வளங்கொழிக்கும் நாடு! எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று இறைவனை வழிபாடு செய்யும் இறைவனருள் பெறுநாடு! என்றெல்லாம் சிறப்புப் பாராட்டப் பெறும் ஒரு பகுதியைத் தன்னகத்தே கொண்டது இந்தியா! இங்குதான் உயர்ந்த எண்ணங்களுக்கு எடுத்துக் காட்டாக இயற்கையரணைக் காட்சிசெயும் இமயமலை உள்ளது! உலக மலைகளிலே உயர்ந்து விளங்குவது! எல்லாரும் உயர்ந்தவர்! எல்லோரும் நல்லவர்! நம்நாடு உயர, வழிசெய்வோம்! அமர்க் களம் கலைந்து அமைதி பெறுவோம்! இன்னல் போக்கி இன் பம் நுகர்வோம்! அறத்தின் வழி நின்று ஆக்கம் பெருக்குவோம். அஞ்ஞானம் அழிய ஆராய்ச்சியைப் பண்படுத்துவோம்! ஆணவம் அழிய அன்பினை வளர்ப்போம்! இன்னா செய்தாரை ஒறுக்க நன்னயஞ் செய்வோம்! அல்லா, ஆண்டவன், இறைவன், இயேசு எல்லாம் ஒன்றே என்றே நினைந்து அன்பு ஆழமாக இதயத்தைப் பண்படுத்துவோம்! அவசியத் தைக்கைக்கொண்டு ஆடம்பரத்தை விடுவோம்! நாமின்றேல் மெய்களுக்குக் காலும் கொம்பும் இல்லை.

அ: அதோ ஈ. யார் வருகின்றார்! வருக! வருக! ஈயார் அவர்களே !!

ஈ: யாரது 'அ'வா! யாரையா "ஈயார் ?" யானு? 'ஈ' அவர்கள் என்று இயம்பும்! ஈந்து ஈந்து இப்படியுள்ளேன். அதை மறந்து 'ஈ யார்' என்று கூறுகிறீரே, என்ன அக்கிரமம், அநீதி !!

அ: சிறப்புவிகுதியுடன் செப்பினல் சீறுகிறீரே! அதுவும் நன்று தான்! "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்று கூறியவர் உம்மைப்பார்த்துத்தான் கூறினர் போலும்!

ஈ: "அழக்கொண்ட வெல்லாம் அழப்போம்! அறஞ் செய்யார், அதிருப்தி கொண்டோர் தேட்டையே தீயோர் கொள்வர்." ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" எனும் குறளுக்கு ஈடு ஏது ?

ஆ: இ: அப்படிச் சொல்லுங்க! அப்படிச் சொல்லுங்க! நல்லபோடு.

அ: ஈரமற்ற இதயம் வேண்டாம்! நண்பர்களே! "ஈவதைக் கண்டு இளித்தானும் ஆண்டி!" இவற்றல் ஆவது யாது ?

ஆ: என்ன, "ஈவதை" "இவற்றல்" என்றெல்லாம் இயம்ப ஈங்குள்ள யாவரும் கேட்டு வாளாவிருக்கிறோம் என்று எண்ணமா ? அதிருப்தி உண்டாக்க வேண்டாம்! அனுவசியத்தினை விலைக்கு வாங்க வேண்டாம் நண்பரே! அஞ்ஞானம் மடிய விஞ்ஞான ஆராய்ச்சி பெறுகட்டும். அருள் பெறுக அருள்நீதி மலியட்டும்!

